# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண்.46

## தமிழ் வளர்ச்சி
## 2024–2025


**மு.பெ. சாமிநாதன்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# தமிழ் வளர்ச்சித் துறை

## பொருளடக்கம்


| இயல் எண். | தொடர் எண். | பொருண்மை | பக்க எண் |
|---|---|---|---|
| | | **முன்னுரை** | 1 |
| 1 | **தமிழ் வளர்ச்சித் துறை** | | |
| | 1.1 | ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் | 4 |
| | 1.2 | மக்கள் நலத் திட்டங்கள் | 14 |
| | 1.3 | மாணவர்களுக்கான திட்டங்கள் | 34 |
| | 1.4 | விழாக்கள் | 50 |
| | 1.5 | விருதுகள் | 57 |
| | 1.6 | கனவு இல்லம் | 77 |
| | 1.7 | தமிழ் வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் பிற துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 79 |
| | 1.8 | இலக்கியப் பணிகள் | 84 |
| | 1.9 | தமிழிருக்கை நிறுவிட நிதியுதவி | 87 |
| | 1.10 | நூல் கொடை | 91 |

| இயல் எண். | தொடர் எண். | பொருண்மை | பக்க எண் |
|---|---|---|---|
| 2 | | **மொழிபெயர்ப்புப் பிரிவு** | |
| | 2.1 | மொழியாக்கப் பொருண்மைகள் | 95 |
| 3 | **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்** | | |
| | 3.1 | தோற்றம் | 97 |
| | 3.2 | நோக்கம் | 98 |
| | 3.3 | இயக்ககச் செயற்பாடுகள் | 99 |
| | 3.4 | விருதுகள் | 104 |
| | 3.5 | சொல்வயல் திங்கள் மின்னிதழ் | 108 |
| | 3.6 | சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சி | 108 |
| | 3.7 | துறைசார் வல்லுநர் குழுக்கூட்டம் | 109 |
| 4 | **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** | | |
| | 4.1 | தொடக்கம் | 111 |
| | 4.2 | நோக்கங்கள் | 111 |
| | 4.3 | நிறுவன ஆளுகைக் குழு | 112 |
| | 4.4 | நிறுவனத்தில் செயல்படும் புலங்கள் | 113 |
| | 4.5 | தமிழ் கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துணைமைப் பணிகள் | 115 |

| இயல் எண். | தொடர் எண். | பொருண்மை | பக்க எண் |
|---|---|---|---|
| | 4.6 | மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதியுதவி | 117 |
| | 4.7 | விரிவுரையாளர் / ஆராய்ச்சிக்கான தகுதித்தேர்வுகள் பயிற்சி | 118 |
| | 4.8 | தமிழ் மொழிக் கற்பித்தல் | 119 |
| | 4.9 | திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் | 119 |
| | 4.10 | ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் | 120 |
| | 4.11 | பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் | 121 |
| | 4.12 | அறக்கட்டளைகள் | 123 |
| | 4.13 | ஆய்விருக்கைகள் | 123 |
| | 4.14 | நூல் வெளியீடுகள் | 124 |
| | 4.15 | தமிழியல் | 125 |
| | 4.16 | ஆய்வு நூலகம் | 126 |
| 5 | **தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.** | | |
| | 5.1 | தோற்றம் | 127 |
| | 5.2 | குறிக்கோள்கள் | 130 |
| | 5.3 | 2023–2024ஆம் ஆண்டில் மாணவர்கள் நேரடிச் சேர்க்கை விவரம் | 131 |
| | 5.4 | செயல்பாடுகள் | 132 |

| இயல் எண். | தொடர் எண். | பொருண்மை | பக்க எண் |
|---|---|---|---|
| | 5.5 | நடைபெற்றுவரும் திட்டங்கள் | 133 |
| | 5.5.1 | தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ்மண்ணின் மரபுகளை ஆவணப்படுத்துதல், மரபுக்கலைகளை மீட்டுருவாக்கம் செய்தல் திட்டம் | 133 |
| | 5.5.2 | தமிழ்ப் பல்கலைக்கழகத் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகள் பெற நடவடிக்கை | 134 |
| | 5.5.3 | தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை | 135 |
| | 5.5.4 | முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகை வழங்குதல் | 135 |
| | 5.6 | அறக்கட்டளைகள் | 136 |
| | 5.7 | மரகதப் பூங்கா | 136 |
| | 5.8 | தமிழ்ப் பண்பாட்டு மையம் / தமிழ் வளர் மையம் | 137 |
| | 5.9 | புதிய கட்டடங்கள் | 138 |
| 6 | **உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை** | | |
| | 6.1 | தோற்றம் | 139 |
| | 6.2 | சங்க அமைப்பு நோக்கம் | 141 |
| | 6.3 | சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் | 142 |

| இயல் எண். | தொடர் எண். | பொருண்மை | பக்க எண் |
|---|---|---|---|
| | 6.4 | வாரந்தோறும் தமிழ்க்கூடல் | 143 |
| | 6.5 | நூல் அரங்கேற்றம் | 143 |
| | 6.6 | நிறுவனர் நாள் | 147 |
| | 6.7 | அயலகத் தமிழ் நூல் வெளியீடு | 147 |
| | 6.8 | உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் | 147 |
| | 6.9 | அறக்கட்டளைகள் | 148 |
| | 6.10 | அயலகத் தமிழ் நூல்களின் கருவூலம் | 149 |
| | 6.11 | உலகத் தமிழ்ச் சங்க வெளியீடுகள் | 149 |
| | **நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்** | | 152 |
| | **நிறைவுரை** | | 154 |
| | **வரவு செலவுத் திட்ட மதிப்பீடு** | | 157 |

# தமிழ் வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024-2025

## முன்னுரை

மொழி நீரோடை போன்றது. பேசும் மக்களின் முயற்சியால் வளம் பெறக்கூடியது. மொழிக்குரியோர் போற்றத் தவறினால் அது திரிபடைந்து மறைந்து விடுகிறது. மொழி தொடர்ச்சி உடையது. வழிவழியாக வரும் மரபுவழிச் சொத்து போன்றது. ஒரு மொழிக்குரியோர், வேறு மொழியாளரின் இடையில் வாழ வேண்டிய சூழ்நிலை பெற்றபோதும், அவர்களுக்கு மொழிப்பற்று இருக்குமானால், அம்மொழி மரபுவழிச் செல்வம் போல அழிவின்றி விளங்கும்.

மொழி சிந்தைக்கு இன்பம் ஊட்டுகிறது. அதன் சிறப்பு இலக்கியத்தில் வாழ்கிறது. வளர்ச்சி பெறாத மொழியில் பொருள்களுக்கு மட்டுமே சொற்கள் உண்டு. செம்மையுற்ற மொழியில் நுண்கருத்தையும் புலப்படுத்தவல்ல சொற்கள் இருக்கும்.

'ழ்' என்னும் ஒலி 'தமிழ்', 'மொழி' என்னும் சொற்களிலேயே அமைந்துள்ளன. இந்த ழகரத்தைத் தமிழில் 'சிறப்பு ழகரம்' என்று வழங்குவர். 'ழ்' என்னும் இந்த ஒலியன் மலையாளம், மாண்டரின் போன்ற இரண்டொரு மொழிகளிலேதான் வழங்குகிறது என்பர் மொழியியல் ஆய்வாளர்கள்.

**"யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**

என்று முழங்கிய மகாகவி பாரதியார்,

**"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே**
**வான மளந்த தனைத்தும்**
**அளந்திடும் வண்மொழி வாழியவே"**

என்று தமிழ்மொழியை வாழ்த்திக் களிக்கின்றார்.

தமிழ் மிகுந்த வளர்ச்சிப் பெற்று உயர்ந்திருந்த காலத்தில் உருவாகிய தமிழ்மொழியின் கட்டமைப்பையும் தமிழரின் பண்பாட்டையும் எடுத்தியம்பிய நூல் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமாகும். இத்தகைய நூலை உருவாக்கும் அளவுக்கு அக்காலத்திலேயே தரவுகளைப் பெற்றிருந்த

மொழி தமிழ் என்பதன் மூலம் தமிழின் தொன்மையினையும் வளத்தினையும் அறிய முடிகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நம் தாய்மொழியாம் தமிழைப் பற்றிக் கூறும் போது,

"நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய்மொழியைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் மொழியாளர்கள் எல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றுள்ளீர்கள்? ஈராயிரமாண்டுக் காலமாகவா மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகிறது? என்று ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும் பொறாமையோடு சிலரும் பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ் மொழி இருக்கின்றது" எனப் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

# இயல் – 1

# தமிழ் வளர்ச்சித் துறை

## 1.1 ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

### 1.1.1 ஆட்சி மொழிச் செயலாக்க ஆய்வு

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக தமிழ் வளர்ச்சிப் பணிகள் செம்மாந்த நடையில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் முதன்மையானது ஆட்சிமொழிச் செயலாக்கப் பணியாகும்.

அரசு நிருவாகம் அந்நாட்டு மக்கள் பேசும் மொழியில் நடைபெற்றால் மட்டுமே வெளிப்படைத்தன்மையானதாக இருக்கும். இதனை கருத்திற்கொண்டே ஆட்சிமொழிச் சட்டம் 1956–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 23.01.1957–இல் இச்சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் நிருவாக அலுவல்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறதா என ஆய்வு செய்ய வேண்டியது

இன்றியமையாத பணியாகும். இப்பணி தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 1.1.2 ஆட்சிமொழிப் பயிலரங்குகள் / கருத்தரங்கங்கள்

ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப் பயன்பாடு என அனைத்துப் பொருண்மைகளிலும் மின்காட்சியுரை உதவியுடன் அரசுப் பணியாளர்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்திட அறிஞர்கள் குழுவாக பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றனர். பயிற்சியாளர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறுகின்றன. இப்பயிலரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வீதம் என மொத்தம் ரூ.19,00,000/– (ரூபாய் பத்தொன்பது இலட்சம் மட்டும்) ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அரசுத்துறைகள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்களுக்கு தமிழ் இலக்கண இலக்கியங்களில் புலமை வாய்ந்தவர்களைக் கொண்டும், துறை அலுவலர்களைக் கொண்டும், ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. அரசிற்கும் பொதுமக்களுக்கும் ஒளிவு மறைவின்றி நிருவாக அலுவல்கள் தமிழில் சிறப்புற நடைபெற இக்கருத்தரங்கம் பெரிதும் உதவுகிறது. இக்கருத்தரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/- வீதம் ஆண்டுதோறும் ரூ.7,60,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2023-2024-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 36 மாவட்டங்களில் பயிலரங்குகள்/கருத்தரங்குகள் நடத்தப்பெற்று 3752 அரசுப் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

# 2023 – 2024–ஆம் நிதி ஆண்டில் ஆட்சிமொழிப் பயிலரங்கம் / கருத்தரங்கம் நடத்தப்பெற்ற விவரம்

| வ. எண் | மாவட்டம் | பயிலரங்கம் / கருத்தரங்கம் நடைபெற்ற நாள்கள் | |
|---|---|---|---|
| 1. | வேலூர் | 05.10.2023 | 06.10.2023 |
| 2. | கிருட்டிணகிரி | 11.10.2023 | 12.10.2023 |
| 3. | திருவள்ளூர் | 12.10.2023 | 13.10.2023 |
| 4. | பெரம்பலூர் | 17.10.2023 | 18.10.2023 |
| 5. | மதுரை | 26.10.2023 | 27.10.2023 |
| 6. | தஞ்சாவூர் | 31.10.2023 | 01.11.2023 |
| 7. | காஞ்சிபுரம் | 08.11.2023 | 09.11.2023 |
| 8. | அரியலூர் | 08.11.2023 | 09.11.2023 |
| 9. | சிவகங்கை | 14.11.2023 | 15.11.2023 |
| 10. | இராமநாதபுரம் | 16.11.2023 | 17.11.2023 |
| 11. | செங்கல்பட்டு | 23.11.2023 | 24.11.2023 |
| 12. | தேனி | 28.11.2023 | 29.11.2023 |
| 13. | மயிலாடுதுறை | 29.11.2023 | 30.11.2023 |

| | | | |
|---|---|---|---|
| 14. | கன்னியாகுமரி | 30.11.2023 | 01.12.2023 |
| 15. | திண்டுக்கல் | 07.12.2023 | 08.12.2023 |
| 16. | புதுக்கோட்டை | 11.12.2023 | 12.12.2023 |
| 17. | கடலூர் | 12.12.2023 | 13.12.2023 |
| 18. | சேலம் | 13.12.2023 | 14.12.2023 |
| 19. | விருதுநகர் | 21.12.2023 | 22.12.2023 |
| 20. | ஈரோடு | 11.01.2024 | 12.01.2024 |
| 21. | கோயம்புத்தூர் | 23.01.2024 | 24.01.2024 |
| 22. | கரூர் | 23.01.2024 | 24.01.2024 |
| 23. | நாகப்பட்டினம் | 30.01.2024 | 31.01.2024 |
| 24. | திருச்சிராப்பள்ளி | 01.02.2024 | 02.02.2024 |
| 25. | தருமபுரி | 06.02.2024 | 07.02.2024 |
| 26. | தூத்துக்குடி | 06.02.2024 | 07.02.2024 |
| 27. | திருவண்ணாமலை | 13.02.2024 | 14.02.2024 |
| 28. | சென்னை | 14.02.2024 | 15.02.2024 |
| 29. | திருப்பூர் | 15.02.2024 | 16.02.2024 |
| 30. | திருவாரூர் | 15.02.2024 | 16.02.2024 |
| 31. | விழுப்புரம் | 20.02.2024 | 21.02.2024 |
| 32. | திருப்பத்தூர் | 20.02.2024 | 21.02.2024 |
| 33. | தென்காசி | 20.02.2024 | 21.02.2024 |
| 34. | திருநெல்வேலி | 22.02.2024 | 23.02.2024 |

| | | | |
|---|---|---|---|
| 35. | இராணிப்பேட்டை | 22.02.2024 | 23.02.2024 |
| 36. | கள்ளக்குறிச்சி | 27.02.2024 | 28.02.2024 |

2023-2024-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் 1937 ஆடவரும் 1815 மகளிரும் என மொத்தம் 3752 பணியாளர்கள் பங்குகொண்டு பயனடைந்துள்ளனர். **அரசு அலுவலகங்கள் பயன்பெறும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் வெளியீடான ஆட்சிச்சொல்லகராதி 14.08.2023 அன்று வெளியிடப்பட்டது.**

**2024 – 2025– ஆம் ஆண்டில் பயிலரங்கம் நடத்திட ரூ.19,00,000/–மற்றும் கருத்தரங்கம் நடத்திட ரூ.7,60,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.1.3 **ஆட்சிமொழிச் சட்ட வாரம்**

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956–ஆம் நாளை நினைவுகூரும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டி நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும் விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள் தோறும்

ஆட்சிமொழிச் சட்ட வாரம் 2019–ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் **டிசம்பர் திங்கள் 21 முதல் 27 வரை** ஒரு வாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வார விழாவில் பின்வரும் வகையில் 7 நாட்கள் நிகழ்ச்சிகளை நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வீதம் அரசு நிதியினை வழங்குகிறது.

| | |
|---|---|
| முதல் நாள் | • கணினித் தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்<br>• ஒருங்குறிப் பயன்பாடு குறித்துப் பயிற்சி அளித்தல். |
| இரண்டாம் நாள் | ஆட்சிமொழி மின்காட்சியுரை நடத்துதல் |
| மூன்றாம் நாள் | ஆட்சிமொழிப் பட்டிமன்றம் நடத்துதல் |
| நான்காம் நாள் | தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்பு |
| ஐந்தாம் நாள் | வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைப்பதற்கான வணிக நிறுவன உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம். |

| | |
|---|---|
| ஆறாம் நாள் | ஒன்றியம், வட்டம், மாவட்டம் அளவிலான ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் நடத்துதல். |
| ஏழாம் நாள் | தமிழ் அமைப்புகள் மாணவர்களுடன் இணைந்து விழிப்புணர்வுப் பேரணி |

2023 - 2024-ஆம் ஆண்டில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் டிசம்பர் 18 முதல் 27 வரை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெற்றன.

**2024-2025-ஆம் ஆண்டில் ரூ.38,00,000/-(ரூபாய் முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.1.4 சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித்திட்டப் பயிற்சி

சென்னை மாவட்டத்தில் மட்டும் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு துறைவாரியாக ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் 2004-ஆம் ஆண்டு முதல் நடத்தப்பெற்று வருகின்றன. இத்திட்டப் பயிற்சியில் பங்கு பெறுபவர்களுக்கு ஆட்சிமொழிச் சட்டம் / வரலாறு, ஆட்சிமொழிச் செயலாக்கமும் அரசாணைகளும், கலைச் சொல்லாக்கமும்

மொழிபெயர்ப்பும், மொழிப்பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் என விரிவான முறையில் இரண்டு நாள்கள் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி நடத்திட ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் ரூ.30,000/– வீதம் 5 பயிற்சி வகுப்புகளுக்காக ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.1.5 வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்

தமிழ்நாட்டிலுள்ள வணிக நிறுவனங்கள், உணவகங்கள், கடைகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றின் பெயர்ப்பலகைகள் முதலில் தமிழில் முதன்மையாக இடம்பெற வேண்டும் என்பதுடன், அதனைத் தொடர்ந்து ஆங்கிலத்திலும், தத்தம் தாய்மொழிகளிலும் 5:3:2 என்ற விகிதத்தில் அமையப்பெற வேண்டும் என்று அரசாணை (நிலை)

எண். 1541, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 29.07.1982–இல் ஆணை வெளியிடப்பட்டது.

மேலும் பெயர்ப்பலகைகள் தொடர்பான விதிமீறல்களுக்கு விதிக்கப்படும் தண்டத்தொகை ரூ.50/–லிருந்து ரூ.2000/– ஆக உயர்த்தப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண். 354, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 09.10.2023–இல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை மாற்றம் குறித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, மத்திய சென்னை மாவட்டம், மயிலாப்பூர்–மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து 01.03.2024 அன்று விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பெற்றது.

## 1.2 மக்கள் நலத் திட்டங்கள்

### 1.2.1 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 1978ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஐம்பத்தெட்டு (58) வயது நிறைவடைந்த, ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு (ரூபாய் எழுபத்திரண்டாயிரம் மட்டும்) மிகாமல் இருக்கும் அகவை முதிர்ந்த நூறு தமிழறிஞர்களை வல்லுநர் குழுவால் தெரிவு செய்து அவர்களின் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூபாய் 3,500/- மற்றும் மருத்துவப்படியாக ரூபாய் 500/- ஆக மொத்தம் ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) வழங்கப்படுகிறது.

1978 முதல் 2023-ஆம் ஆண்டுவரை 1334 பயனர்களுக்கு உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது 691 பயனர்கள் உதவித்தொகை பெற்றுவருகின்றனர்.

# அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை உயர்த்தப்பட்ட விவரம்

| வ. எண் | உதவித் தொகை அளவு | மருத்துவப் படி | எந்த நாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | ரூ.100/– | – | 01.01.1978 முதல் | அரசாணை (நிலை) எண்.1, கல்வித் துறை, நாள்.02.01.1978 |
| 2 | ரூ.250/– | – | 01.01.1979 முதல் | அரசாணை (நிலை) எண். 607, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள்.06.04.1979 |
| 3 | ரூ.350/– | – | 01.04.1990 முதல் | அரசாணை (நிலை) எண்.94, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் (தவ1.1) துறை, நாள். 29.05.1990 |
| 4 | ரூ.400/– | – | 15.01.1991 முதல் | அரசாணை (நிலை) எண்.54, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் (தவ1.1) துறை நாள். 11.03.1991 |
| 5 | ரூ.500/– | – | 10.09.1996 முதல் | அரசாணை (நிலை) எண்.222, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் (தவ2.2) துறை, நாள்.10.09.1996 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ரூ.1000/- | ரூ.15/- | 1.9.2006 முதல் | அரசாணை (நிலை) எண்.301, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டு மற்றும் அறநிலையத் (தவ1.2) துறை, நாள்.06.11.2006 |
| 7 | ரூ.2000/- | ரூ.15/- | 1.12.2011 முதல் | அரசாணை (நிலை) எண்.311, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ1.2)த் துறை, நாள்.02.12.2011 |
| 8 | ரூ.2500/- | ரூ.100/- | 5.10.2017 முதல் | அரசாணை (நிலை) எண்.181, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.2)த் துறை, நாள்.05.10.2017 |
| 9 | ரூ.3500/- | ரூ.500/- | 01.12.2020 முதல் | அரசாணை (நிலை) எண்.120, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.2) த் துறை, நாள்.16.12.2020 |
| **மருத்துவப்படி** | | | | |
| **வ. எண்** | **மருத்துவப் படி அளவு** | **உயர்த்தப் பட்ட மருத்துவப் படி** | **எந்த நாள் முதல்** | **அரசாணை மற்றும் நாள்** |
| 1 | ரூ.15/- | ரூ.100/- | 22.12.2014 முதல் | அரசாணை (நிலை) எண்.209, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.2) த் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | துறை, நாள்.22.12.2014 |
| 2 | ரூ.100/- | ரூ.500/- | 1.7.2018 முதல் | அரசாணை (நிலை) எண். 184, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.2)த் துறை, நாள் 03.09.2018 |

## 1.2.2 அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மரபுரிமையருக்கு உதவித்தொகை

அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மறைவுக்குப் பின் அவரின் மரபுரிமையருக்குத் திங்கள்தோறும் ரூ.2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- ஆக மொத்தம் ரூ.3,000/- வீதம் (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. தற்போது 37 மரபுரிமையர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

**2024-2025-ஆம் ஆண்டிற்கு ரூ.4,00,00,000/- (ரூபாய் நான்கு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.2.3 எல்லைக் காவலர்களுக்கு உதவித்தொகை

இந்தியா விடுதலை பெற்ற பின்பு 1956–ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அவ்வகையில் சென்னை மாகாணம் தனி மாநிலமாக 01.11.1956–ஆம் நாள் உருவானது. தமிழர்கள் அதிகம் வாழும் சில பகுதிகள் (கன்னியாகுமரி, திருத்தணி, பீர்மேடு, கூடலூர், தேவிக்குளம்) அண்டை மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டபோது மீண்டும் அப்பகுதிகளைத் தமிழ்நாட்டோடு இணைக்கப் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

அவ்வாறான எல்லைப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறை சென்ற தியாகிகளுக்கு 1988–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. எல்லைக் காவலர்களுக்கு திங்கள்தோறும் ரூ.5500/– மற்றும் மருத்துவப்படி ரூ.500/– ஆக மொத்தம் ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 405 எல்லைக் காவலர்களுக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது 76 எல்லைக் காவலர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

## எல்லைக் காவலர்களின் உதவித்தொகை

## உயர்த்தப்பட்ட விவரம்

| வ. எண் | உதவித் தொகை அளவு | மருத்து வப் படி | எந்த நாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | ரூ.250/- | - | 14.04.1987 முதன் முதலில் வழங்கப்பட்ட தொகை | அரசாணை (நிலை) எண். 72, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 03.03.1988 |
| 2 | ரூ.350/- | - | 01.10.1989 முதல் | அரசாணை (நிலை) எண். 412, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 15.12.1989 |
| 3 | ரூ.400/- | - | 01.01.1991 முதல் | அரசாணை (நிலை) எண். 5, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 10.01.1994 |
| 4 | ரூ.500/- | - | 10.09.1996 முதல் | அரசாணை (நிலை) எண். 222, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 10.09.1996 அரசுக் கடித எண்.13621/தவ2-2/95-2, நாள் : 05.10.1996 |
| 5 | ரூ.1500/- | ரூ.15/- | 10.10.1996 முதல் | அரசாணை (நிலை) எண்.241, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் : 10.10.1996 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ரூ.3000/- | ரூ.15/- | 15.08.1997/- | அரசாணை (நிலை) எண்.25, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 08.10.1997 |
| 7 | ரூ.4000/- | ரூ.15/- | 01.11.2006 முதல் (பொன்விழா ஆண்டை யொட்டி) | அரசாணை (நிலை) எண்.336, தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் : 01.12.2006 |
| 8 | ரூ.4500/- | ரூ.500/- | 01.07.2018 முதல் | அரசாணை (நிலை) எண்.175, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் : 24.08.2018 |
| 9 | ரூ.5500/- | ரூ.500/- | 01.12.2020 முதல் | அரசாணை (நிலை) எண். 119, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் : 15.12.2020 |

### 1.2.4 எல்லைக் காவலரின் மரபுரிமையருக்கு உதவித்தொகை

எல்லைப் போராட்டத்தில் பங்கேற்று உதவித்தொகை பெற்று வந்த எல்லைக் காவலரின் மறைவிற்குப்பின் அவருடைய மரபுரிமையருக்கு 1988-ஆம் ஆண்டு முதல் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மரபுரிமையர்களுக்கு

திங்கள்தோறும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக ரூ.3000/- மற்றும் மருத்துவப்படி ரூ.500/- ஆக மொத்தம் ரூ.3500/- (ரூபாய் மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கப்படுகிறது.

இதுவரை 305 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போது 123 மரபுரிமையர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

**எல்லைக் காவலரின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை உயர்த்தப்பட்ட விவரம்**

| வ.எண் | உதவித் தொகை அளவு | மருத்துவப்படி | எந்தநாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | ரூ.250/- | - | 14.04.1987 முதல் | அரசாணை (நிலை) எண்.72, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 03.03.1988 |
| 2 | ரூ.350/- | - | 01.10.1989 முதல் | அரசாணை (நிலை) எண். 412, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 15.12.1989 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ரூ.400/– | – | 01.01.1991 முதல் | அரசாணை (நிலை) எண். 5, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 10.01.1994 |
| 4 | ரூ.500/– | – | 10.09.1996 முதல் | அரசாணை (நிலை) எண்.222, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள்: 10.09.1996 அரசுக் கடித எண்.13621/ தவ2–2/95–2, நாள்: 05.10.1996 |
| 5 | ரூ.750/– | ரூ.15/– | 10.10.1996 முதல் | அரசாணை (நிலை) எண்.241, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத்துறை, நாள்: 10.10.1996 |
| 6 | ரூ.1500/– | ரூ.15/– | 15.08.1997 முதல் | அரசாணை (நிலை) எண்.257, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள்: 08.10.1997 |
| 7 | ரூ.2000/– | ரூ.15/– | 01.11.2006 முதல் (பொன் விழா ஆண்டை யொட்டி) | அரசாணை (நிலை) எண். 336, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டு மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அறநிலையங்கள் துறை, நாள்: 01.12.2006 |
| 8 | ரூ.2500/- | ரூ.500/- | 01,07.2018 முதல் | அரசாணை (நிலை) எண். 171, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்: 21.08.2018 |
| 9 | ரூ.3000/- | ரூ.500/- | 01.12.2020 முதல் | அரசாணை (நிலை) எண். 126, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்:28.12.2020 |

## 1.2.5 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்படி தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க தொண்டு செய்தவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக திங்கள்தோறும் ரூ.4,500/- மற்றும் மருத்துவப்படி ரூ.500/- ஆக மொத்தம் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்படுகிறது.

1988-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தில், இதுவரை 1105 தமிழறிஞர்களுக்கு

உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது 275 தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாட்டில் வாழும் 275 தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில், ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் ஒரு முறை மட்டும் வழங்கிட ஏதுவாக, ரூ.27,50,000/- சிறப்பு நேர்வாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 121 தமிழறிஞர்களுக்கு 31.01.2024 அன்று திருப்பூர், செங்கம்பள்ளியில் உள்ள அழகு நாச்சியப்பன் திருமண மண்டபத்தில் வழங்கப்பட்டது. ஏனைய தமிழறிஞர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வழங்கப்பட்டது.

## தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை உயர்த்தப்பட்ட விவரம்

| வ.எண் | உதவித் தொகை அளவு | மருத்துவப் படி | எந்த நாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | ரூ.250/- | - | 14.04.1987-ல் முதன் முதலில் வழங்கப்பட்ட தொகை | அரசாணை (நிலை) எண். 72, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 03.03.1988 |
| 2 | ரூ.350/- | - | 01.10.1989 முதல் | அரசாணை (நிலை) எண். 412, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 15.12.1989 |
| 3 | ரூ.400/- | - | 01.01.1991 முதல் | அரசாணை (நிலை) எண். 5, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 10.01.1994 |
| 4 | ரூ.500/- | - | 10.09.1996 முதல் | அரசாணை (நிலை) எண். 222, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் : 10.09.1996 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அரசுக் கடித எண். 13621/தவ2-2 /95-2, நாள் : 05.10.1996 |
| 5 | ரூ.1500/- | ரூ.15/- | 10.10.1996 முதல் | அரசாணை (நிலை) எண். 241, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 10.10.1996 |
| 6 | ரூ.3000/- | ரூ.15/- | 15.08.1997 முதல் | அரசாணை (நிலை) எண். 257, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 08.10.1997 |
| 7 | ரூ.3500/- | ரூ.500/- | 01.07.2018 முதல் | அரசாணை (நிலை) எண்.169, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் : 21.08.2018 |
| 8 | ரூ.4500/- | ரூ.500/- | 01.01.2021 முதல் | அரசாணை (நிலை) எண்.17, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, நாள் : 01.02.2021 |

## 1.2.6 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

தமிழ்நாடு அரசால் உதவித்தொகை பெற்றுவந்த தமிழறிஞர்கள் இயற்கையெய்திய பின்னர், அவர்களின் மரபுரிமையருக்குத் திங்கள்தோறும் உதவித்தொகை 1988–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. அவ்வகையில் தற்போது திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.2,500/– மற்றும் மருத்துவப்படி ரூ.500/– ஆக மொத்தம் ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) வழங்கப்படுகிறது.

இதுவரை 1039 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது 572 மரபுரிமையர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

# தமிழறிஞரின் மரபுரிமையர்கள் உதவித்தொகை உயர்த்தப்பட்ட விவரம்

| வ.எண் | உதவித் தொகை அளவு | மருத்துவப் படி | எந்தநாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | ரூ.250/– | – | 14,04.1987– இல் முதன் முதலில் வழங்கப்பட்ட தொகை | அரசாணை (நிலை) எண். 72, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 03.03.1988 |
| 2 | ரூ.350/– | – | 01.10.1989 முதல் | அரசாணை (நிலை) எண். 412, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 15.12.1989 |
| 3 | ரூ.400/– | – | 01.01.1991 முதல் | அரசாணை (நிலை) எண்.5, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 10.01.1994 |
| 4 | ரூ.500/– | – | 10.09.1996 முதல் | அரசாணை (நிலை) எண். 222, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 10.09.1996 அரசுக் கடித எண். 13621/தவ2–2/95–2, நாள் : 05.10.1996 |
| 5 | ரூ.750/– | ரூ.15/– | 10.10.1996 முதல் | அரசாணை (நிலை) எண். 241, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் : 10.10.1996 |
| 6 | ரூ.1500/– | ரூ.15/– | 15.08.1997 முதல் | அரசாணை (நிலை) எண். 257, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் : 08.10.1997 |
| 7 | ரூ.2000/– | ரூ.500/– | 01.07.2018 முதல் | அரசாணை (நிலை) எண். 170, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் : 21.08.2018 |
| 8 | ரூ.2500/– | ரூ.500/– | 01.01.2021 முதல் | அரசாணை (நிலை) எண். 127, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் : 29.12.2020 |

## 1.2.7 தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்களுக்கு ஈமச்சடங்குத் தொகை

தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் இறந்த பின்பு அவர்களின் மரபுரிமையரால் வாரிசுச் சான்றிதழுடன் அந்தந்த மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்கும் நேர்வில் இறந்தவரின் ஈமச்சடங்குச் செலவுகளுக்குத் தொகை வழங்கப்படுகிறது.

1984–இல் ரூ.1000/–ஆக வழங்கப்பட்டு வந்த ஈமச்சடங்குத் தொகை 01.07.2018 முதல் ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டு வரை 85 நபர்களுக்கு ஈமச்சடங்கு செலவுகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

**2024 – 2025 –ஆம் ஆண்டில் உதவித் தொகை திட்டங்களுக்காக ரூ.6,50,00,000/– (ரூபாய் ஆறு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.2.8 பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச்சலுகை

தமிழ்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள் மற்றும் தமிழறிஞர்களுக்கு பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு 321 அறிஞர்களுக்கும் 2023–2024–ஆம் ஆண்டு 591 அறிஞர்களுக்கும் ஆக மொத்தம் 912 அறிஞர்கள் இச்சலுகையினைப் பெற்று வருகின்றனர்.

### 1.2.9 சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

தனித்துவமிக்க தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த படைப்புகளைப் படைத்த நூலாசிரியர்களுக்கும் அவற்றை வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் போட்டிக்குப் பெறப்படும் நூல்களைப் பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்ட குழுவால் மதிப்பீடு செய்து ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூலைத் தெரிவு செய்து அந்நூலை எழுதிய நூலாசிரியருக்கு ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) பரிசுத்தொகையுடன் சான்றிதழும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பரிசுத்தொகையுடன் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2020 மற்றும் 2021–ஆம் ஆண்டிற்குத் தெரிவு

செய்யப்பெற்ற நூல்களின் நூலாசிரியர் மற்றும் பதிப்பகத்தாருக்குப் 14.02.2024 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.13,80,000/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.2.10 தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம்

## (சிறந்த நூல்கள் / அரிய நூல்கள்/ மொழிபெயர்ப்பு நூல்கள்)

சிறந்த நூல்களை வெளியிடுவதற்கான நிதியுதவி திட்டம் 1994–ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது. சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும், அரிய நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும் அதே போன்று பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் என நூலின் சிறப்புத் தன்மையைப் பொறுத்து ஆகும் செலவினம் எழுதுபொருள் அச்சுத்துறையால் மதிப்பீடு செய்து நூல்

அச்சிட்டு வெளியிட அரசால் உச்ச அளவாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதியுதவி வழங்கப்படுகிறது.

**2024-2025-ஆம் ஆண்டில் ரூ.7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.3. மாணவர்களுக்கான திட்டங்கள்

## 1.3.1. போட்டிகள்

### அ) குறள் பரிசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குறள் பரிசுத் திட்டம் கடந்த 2000-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்த 70 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10,000/- குறள் பரிசுத் தொகையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன.

2022–ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்ச வரம்பு நீக்கப்பட்டு குறள் ஒப்பித்தல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறள் பரிசுத்தொகை தலா ரூ.10,000/– வீதம் வழங்க ஆணையிடப்பட்டது. அவ்வகையில் 2022–ஆம் ஆண்டு 219 மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குத் திருக்குறள் மீதான ஆர்வத்தை மேலும் கூட்டிடும் வகையில் திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களையும் ஒப்பித்தல் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகை 2022–2023–ஆம் ஆண்டு முதல் ரூ.10,000/–த்திலிருந்து ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இப்பரிசுத் திட்டம் தொடங்கப்பட்டு கடந்த 24 ஆண்டுகளில் 920 மாணவர்கள் குறள் பரிசுகள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2023–2024–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் வாயிலாக 34 மாணவர்கள் 74 மாணவிகள் என மொத்தம் 108 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 31 மாணவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மாணவர் மாநாடு–2024–இல் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. ஏனையோருக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக வழங்கப்பட்டது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.22,50,000/– (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஆ) பள்ளி/கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்**

மாணவப் பருவத்திலேயே தமிழில் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும், கவிதை எழுதும் திறனை வளர்க்கவும், தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் 2004ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும்

மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்றுப் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024 – ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற மாணாக்கர்கள் விவரம்

| | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பள்ளி | 508 | 1211 | 1719 |
| கல்லூரி | 572 | 1426 | 1998 |
| | 1080 | 2637 | 3717 |

**கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| **மாவட்ட அளவில்** பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |

| | | |
|---|---|---|
| **மாநில அளவில்** பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 15,000 |
| | இரண்டாம் பரிசு | 12,000 |
| | மூன்றாம் பரிசு | 10,000 |

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.66,88,000/– (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## இ) தலைவர்களின் பிறந்த நாளில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துதல்

"நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும்

வகையில் ஆண்டுதோறும் அவர்களது பிறந்தநாளில் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி , பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் 2021-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பேச்சுப் போட்டியில் அரசுப்பள்ளி மாணவர்களை சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்கு தனியே சிறப்புப்பரிசு இரண்டு மாணவர்களுக்கு ரூ. 2000/- வீதம் வழங்கப்படுகிறது.

2023-2024 - ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற மாணாக்கர்கள் விவரம்

| | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பள்ளி | 2333 | 6729 | 9062 |
| கல்லூரி | 962 | 2609 | 3571 |
| | 3295 | 9338 | 12633 |

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 5,000 |
| | இரண்டாம் பரிசு | 3,000 |
| | மூன்றாம் பரிசு | 2,000 |
| அரசுப்பள்ளி மாணவர்கள் 2 பேருக்குச் சிறப்புப் பரிசுத்தொகை | 2x2,000=ரூ.4,000 | |

**2024–2025 –ஆம் ஆண்டில் ரூ.81,60,000/– (ரூபாய் எண்பத்தோர் இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஈ) தமிழ்நாடு நாள் விழாப் போட்டிகள்**

தமிழ்நாடு நாள் விழாவின் ஓர் அங்கமாக 38 மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்று, இவற்றில்

மாவட்ட / மாநில அளவில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு **ஜூலை** 18–ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்படும் தமிழ்நாடுநாள் விழாவில் 2021–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில் இப்போட்டியில் 1042 பள்ளி மாணவர்களும் 3643 பள்ளி மாணவிகளும் என மொத்தம் 4685 மாணாக்கர்கள் பங்கேற்றுள்ளனர்.

**தமிழ்நாடு நாள் விழா-கட்டுரை (ம) பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை விவரம்**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |

| | | |
|---|---|---|
| மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 50,000 |
| | இரண்டாம் பரிசு | 30,000 |
| | மூன்றாம் பரிசு | 20,000 |

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.28,54,500/– (ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**உ) கல்லூரிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ் மன்றம் அமைத்தல்**

"தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் "மாணவர் தமிழ் மன்றங்கள்" அமைத்து அவற்றின் வாயிலாகக் கல்லூரிகளில் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 2022–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்பெறுகிறது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு "மாணவர் தமிழ்மன்றம்" என்ற பெயர் "முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ்மன்றம்" என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

இதற்கெனக் கல்லூரிக் கல்வி இயக்ககம், மருத்துவக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பம் (ம) பொறியியல் கல்லூரி இயக்ககங்கள் ஆகியவற்றால் தெரிவு செய்யப்பட்ட 100 கல்லூரிகளுக்கு ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டது. 2023-2024-ஆம் ஆண்டு போட்டிகள் நடத்திட ரூ.36,00,000/- என மொத்தம் ரூ.5,36,00,000/- (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தாறு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**2024 - 2025 -ஆம் ஆண்டு முதல் வைப்புத் தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து பெறப்படும் வட்டியினைக் கொண்டு போட்டிகள் நடத்தப்படும்.**

**ஊ) அரசுப் பள்ளிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம்**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியின் தொன்மைப் பெருமைகளை அறியவும், தமிழ் இலக்கிய இலக்கணங்களின் மீது பற்றும் ஆர்வமும் கொள்ளவும், தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் தமிழ்ச்சான்றோர்கள் பற்றி அறிந்து கொள்ள உதவும் வகையில் தமிழ்நாடு முழுவதுமுள்ள 6218 அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளிலுள்ள "தமிழ் மன்றங்களை" மேம்படுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2022–ஆம் ஆண்டு முதல் தமிழ் மன்றங்கள் மூலமாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று 'தமிழ்க்கூடல்' நடத்திட 2022–2023–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– வீதம் ரூ.5,59,62,000/–(ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு "தமிழ் மன்றம்" "முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.5,59,62,000/– (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**எ) இலக்கிய வினாடி – வினா**

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக மாணவர்களுக்காக நடத்தும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் 2019–ஆம் ஆண்டு முதல் இலக்கிய வினாடி–வினாப் போட்டி நடத்தப்பெறுகிறது. இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5,000/– வீதம் மூன்று பேருக்கும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/– வீதம் மூன்று பேருக்கும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/– வீதம் மூன்று பேருக்கும் வழங்கப் பெறுகின்றன. 2023–2024–ஆம்

நிதியாண்டில் 2023 டிசம்பர் திங்கள் 18 முதல் 24–ஆம் தேதி வரை மதுரை, உலகத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற இளந்தமிழர் இலக்கியப் பயிற்சி பட்டறையில் டிசம்பர் 22–ஆம் நாளன்று இப்போட்டி நடத்தி முடிக்கப்பட்டது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஏ) கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு மாணவர்களுக்குத் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல்**

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் பேரில் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும். இதற்காக கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் பெயரில் அறக்கட்டளை நிறுவ ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) 08.03.2024 முதல் வைப்புத்

தொகையாக வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையில் போட்டி நடத்தி மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்படும். 2023–2024–ஆம் நிதியாண்டில் போட்டிகள் நடத்திட ரூ.3,25,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**2024–2025–ஆம் ஆண்டு முதல் வைப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டியினைக் கொண்டு போட்டிகள் நடத்தப்படும்.**

### 1.3.2 மாணவர்களுக்கான பயிற்சிகள்

#### அ) இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப்பட்டறை

தமிழ்வளர்ச்சித் துறையால் 2012–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டந்தோறும் நடத்தப்பெறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களில் விருப்பம் தெரிவிக்கும் 200 பேருக்குப் பல்துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிப் பட்டறையில் மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், அரசு செயற்படுத்தும் மக்கள் நலத் திட்டங்களை அனைத்து மக்களுக்கும் எடுத்துரைத்தல் ஆகியன குறித்து பயிற்சி அளிக்கப்படுவதுடன் சிறுகதை, புதினம், திறனாய்வு, கட்டுரை, கவிதை, செய்தித்தொகுப்பு போன்ற பயிற்சிகளும் ஒரு வார காலம் நடத்தப்பெறுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் 18.12.2023 முதல் 24.12.2023 வரை இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.20,00,000/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### ஆ) இளையோர் இலக்கியப் பயிற்சிப்பாசறை

தமிழ்நாட்டில் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற

ஆர்வத்தையும் படைக்கின்ற ஆற்றலையும் உருவாக்க வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும்.

அதனை நிறைவு செய்யும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக இளையோர் இலக்கியப் பயிற்சிப்பாசறை என்றதொரு நிகழ்வைத் தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் 2023–ஆம் ஆண்டு முதல் நடத்த ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழ்நாட்டில் பயிலும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவர்களிடையே தமிழ்மொழி மீதான ஆர்வத்தை உருவாக்கவும், இலக்கியச் சிந்தனையை மேம்படுத்தவும், தன்னம்பிக்கையை ஊக்குவிக்கவும், தமிழ் இலக்கியங்களை மதிப்பெண்களுக்காக மட்டுமே மனப்பாடம் செய்தால் போதும் என்கிற எண்ணத்தை மாற்றி மாணவர்களைப் பண்படுத்தவும் தமிழறிஞர்களைக் கொண்டு ஒரு நாள் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை திங்கள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு மாவட்டங்களில் நடத்தப்பெறுகிறது. இதற்காக ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.38,00,000 (ரூபாய்

முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 30.08.2023 –ஆம் நாளன்று எத்திராஜ் மகளிர் கல்லூரியில் முதல் பாசறை நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 32 மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 6 மாவட்டங்களில் 2024 சூன் திங்களில் நடத்தி முடிக்கப்படும். 2023–2024–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் வாயிலாக 1290 மாணவர்களும் 1910 மாணவிகளும் என மொத்தம் 3200 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.38,00,000/– (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.4. விழாக்கள்

### 1.4.1 திருவுருவச்சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் வணக்கச் சிறப்புச் செய்தல்

தமிழறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள், தமிழ்ச்சான்றோர்களின் தமிழ்ப் படைப்பாற்றலையும், தமிழ்த் தொண்டினையும் நினைவுகூரும் வகையில் பின்வரும் அறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு

மாலை அணிவித்தும் அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் வணக்கமும் மரியாதையும் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவள்ளுவர் சிலை | மெரினா கடற்கரை, சென்னை.<br>வள்ளுவர் கோட்டம், சென்னை. | தை – 2ஆம் நாள் (திருவள்ளுவர் திருநாள்) |
| 2 | தமிழ்த்தாத்தா உ.வே.சா. சிலை | மாநிலக் கல்லூரி, சென்னை. | பிப்ரவரி – 19 (உ.வே.சா. பிறந்தநாள்) |
| 3 | தமிழ் மூதாட்டி ஔவையார் சிலை | மெரினா கடற்கரை, சென்னை. | மார்ச் – 8 (உலக மகளிர் நாள்) |
| 4 | கவிச்சக்கரவர்த்தி கம்பர் சிலை | அண்ணா சதுக்கம், சென்னை. | மார்ச் – 24 (கம்பர் திருநாள்) |
| 5 | இளங்கோவடிகள் சிலை | அண்ணா சதுக்கம், சென்னை. | ஏப்ரல் – 24 (இளங்கோவடிகள் திருநாள்) |
| 6 | தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் சிலை | மெரினா கடற்கரை, சென்னை. | மே – 7 (இராபர்ட் கால்டுவெல் பிறந்தநாள்) |
| 7 | தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் சிலை | பல்லவபுரம், செங்கல்பட்டு மாவட்டம். | ஜுலை – 15 (மறைமலையடிகள் பிறந்தநாள்) |
| 8 | தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலை | துண்டலம், திருவள்ளூர் மாவட்டம். | ஆகஸ்டு – 26 (திரு.வி.க பிறந்தநாள்) |

| | | | |
|---|---|---|---|
| 9 | தொல்காப்பியர் சிலை | சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகம். | சித்திரை முழுமதி நாள் |
| | | காப்பியக்காடு, கன்னியாகுமரி மாவட்டம். | |
| 10 | தமிழ்த்தாய் சிலை | தமுக்கம் மைதானம், மதுரை. | நாள்தோறும் மலர் மாலையும் பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை புதிய நூல் புடைவையும் அணிவிக்கப்படுகின்றன. |

**2024-2025-ஆம் ஆண்டில் ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.4.2 சங்கப்புலவர்களின் நினைவுத்தூண்களுக்குச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசால், சங்ககாலப் புலவர்களை நினைவுகூரும் வகையில் நிறுவப்பட்டுள்ள 6 நினைவுத் தூண்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் நாளான ஏப்ரல் 29-ஆம் நாளன்று மலர்மாலை அணிவித்து மலர் வணக்கத்துடன் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | புலவர்கள் பெயர் | நிறுவப்பட்டுள்ள இடம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | ஒக்கூர் மாசாத்தியார் | ஒக்கூர் | சிவகங்கை |
| 2 | நல்லூர் நத்தத்தனார் | இடைக்கழிநாடு | செங்கல்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| 3 | மாங்குடி மருதனார் | மாங்குடி | தென்காசி |
| 4 | கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர் | கரூர் | கரூர் |
| 5 | கணியன் பூங்குன்றனார் | மகிபாலன்பட்டி | சிவகங்கை |
| 6 | கபிலர் | திருக்கோவிலூர் | கள்ளக்குறிச்சி |

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.01.2024 அன்று கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூண் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டது.**

**கபிலர் நினைவுத்தூண் 07.03.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.**

**2024 – 2025–ஆம் ஆண்டில் ரூ.1,08,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.**

### 1.4.3 தமிழ்க் கவிஞர் நாள் விழா

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 29–ஆம் நாளினை தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. 29.04.2024–ஆம் நாளன்று மதுரை, உலகத் தமிழ்ச்

சங்க வளாகத்தில் பாவேந்தரை போற்றும் வண்ணம் இலக்கியப் பெருவிழாவாக நடைபெற்றது.

**2024 – 2025–ஆம் ஆண்டில் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.4.4 தமிழ்நாடு நாள் விழா

மெட்ராஸ் மாகாணம் என்று இருந்த நிருவாக நிலப்பரப்பிற்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1967–ஆம் ஆண்டு ஜூலை 18–ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு "தமிழ்நாடு" எனப் பெயரிடப்பட்டது. தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்களால் பெயர் சூட்டிய ஜூலை 18–ஆம் நாளினை "தமிழ்நாடு நாளாகக்" கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.10.2021 அன்று அறிவித்ததற்கிணங்க 18.07.2022–ஆம் நாள் முதல் தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு நாள் விழா தொடர்பாகக் கண்காட்சியும் விழிப்புணர்வுப் பேரணியும் பள்ளி மாணவர்களுக்கு போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

**2024– 2025–ஆம் ஆண்டில் ரூ.3,84,500/– (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.4.5 உலகத் தாய்மொழி நாள் விழா

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்துச் சிறந்து பூத்துக் குலுங்கும் நம் புத்தமுதத் தேன்மொழியைப் போற்றிப் பரவிடும் வகையில், யுனெஸ்கோ நிறுவனத்தினால் 1999–ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு பிப்ரவரி 21 அன்று ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாளை தமிழ் வளர்ச்சித் துறை பெருமிதமாகக் கொண்டாடி வருகிறது. 2023–2024–ஆம் நிதியாண்டில் உலகத் தாய்மொழி நாள் 21.02.2024–ஆம் நாளன்று பட்டிமன்றம், பாட்டரங்கம் மற்றும் கருத்தரங்கம்

சென்னை, தாம்பரம், கிறித்தவக் கல்லூரியில் நடத்தப்பெற்றன.

21.02.2024–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இதனைத்தொடர்ந்து எதிர்வரும் 2025 பிப்ரவரி 21–ஆம் நாள் முதல் ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாளன்று அனைத்து அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை எடுப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**2024– 2025–ஆம் ஆண்டில் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.4.6 இலக்கியக் கூட்டங்கள் நடத்துதல்

புகழ் பெற்ற தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பிறந்த நாளில் அவர்களின் தமிழ் இலக்கியப்பணி, தமிழ்த்தொண்டு, தமிழ்மொழிக்கான

பங்களிப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் திங்கள்தோறும் ஓர் இலக்கியக் கூட்டம் என்ற வகையில் உள்ளூர் இலக்கிய அமைப்புகள் மூலம் 2022–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில் 7 மாவட்டங்களில் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.1,25,000/– வீதம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வேலூர், சேலம், ஈரோடு, திருப்பூர், கடலூர், செங்கற்பட்டு, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டன.

**2024 – 2025–ஆம் ஆண்டில் ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.5 விருதுகள்

தமிழ்மொழியின் தொன்மை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அனைவரும் உணரும் வண்ணம்

தமிழின் பெருமையைத் தளராது உயர்த்திப் பிடித்து வரும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்குவதைத் தூயத் தமிழ்த் தொண்டாக தமிழ்நாடு அரசு கருத்திற்கொண்டு செயலாற்றி வருகிறது.

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 26 வகைப்பாடுகளில் 73 அறிஞர்களுக்கும் சிறப்பாக செயல்படும் தமிழ் அமைப்பு ஒன்றுக்கு என மொத்தம் 74 விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

### 1.5.1 பாவேந்தர் பாரதிதாசன் விருது

தமிழ்த்தொண்டு எனும் சொல்லில் தமிழியக்கம் கண்ட புரட்சிக்கவிஞர் பாவேந்தரின் கவி மரபினைப் போற்றும் வகையில், அவர்தம் மரபில் படைப்புகளை வழங்கும் சிறந்த கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது 1978–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 1990–ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு சிறப்பு நேர்வாக தொடக்க விழாவில் 21 அறிஞர்களுக்கும் 1991–ஆம் ஆண்டு நிறைவு விழாவில் 23 அறிஞர்களுக்கும் என மொத்தம் 44

அறிஞர்களுக்கு ரூ.10,000/- வீதம் விருதுத்தொகை வழங்கப்பட்டது. 2022-ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2023-ஆம் ஆண்டுவரை 87 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.2 தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது

தமிழுக்குப் பன்முகத்தான் தொண்டாற்றி வரும் சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியப் படைப்பாளர் ஒருவருக்குத் 'தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது' 1979-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022-ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2023-ஆம் ஆண்டுவரை 44 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.3 திருவள்ளுவர் விருது

மானுடமறையாம் திருக்குறளில் அறிவுறுத்தப்பட்டுள்ள அறநெறிகளைப் போற்றியும், திருவள்ளுவத்தின் பெருமையை உலகோர் அனைவருக்கும் உணர்த்தும் வகையில் எடுத்துரைத்தும் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு செயன்மையாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்குத் திருவள்ளுவர் திருநாள் அன்று திருவள்ளுவர் விருது 1986–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2024–ஆம் ஆண்டுவரை 39 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.4 மகாகவி பாரதியார் விருது

பாட்டுக்கொரு புலவராம் மகாகவி பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் படைப்புகளையும், பொதுமக்கள் உணர்ந்து பயன்பெறும் வகையில் ஈடுபாட்டுடன் செயற்படும் சிறந்த தமிழ்ப்பெருமக்களுக்கு, மகாகவி பாரதியார் விருது

1997–ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2023–ஆம் ஆண்டுவரை 26 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டினை முன்னிட்டு 2021–ஆம் ஆண்டில் **சிறப்பு நேர்வாக** 6 அறிஞர்களுக்கு ரூபாய் மூன்று இலட்சமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### 1.5.5 முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

முத்தமிழ்க்காவலர் நெறியில், தமிழ்த் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் விருது 2000–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2023–ஆம் ஆண்டுவரை 22 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.6 பேரறிஞர் அண்ணா விருது

அல்லும் பகலும் அயராது உழைத்து, அருந்தமிழ்நாட்டை உயர்த்தி வளர்த்த தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்ச்சமுதாயம் எத்திக்கிலும் வளர்ச்சி பெற்றுத் தழைத்தோங்க வேண்டும் என்று தம் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டவர் ஆவார். அவரது சீரிய சிந்தனைச் செயலாக்கத்தை தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, மக்கள் நலப்பணியில் மக்களோடு இணைந்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும் ஒருவருக்கு பேரறிஞர் அண்ணா விருது 2006–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2023–ஆம் ஆண்டுவரை 18 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.7 பெருந்தலைவர் காமராசர் விருது

தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அடிச்சுவட்டில், அவர்தம் கொள்கைநெறியில் தமிழ்நாட்டு மக்களுக்காகச்

சேவை புரிந்து வருவோருள் ஒருவருக்கு ஆண்டுதோறும் பெருந்தலைவர் காமராசர் விருது 2006–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்படுவதுடன் ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியனவும் வழங்கப்படுகின்றன. 2023–ஆம் ஆண்டுவரை 18 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2024–ஆம் நாளன்று 2023–ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ் தென்றல் திரு.வி.க. விருது, மகாகவி பாரதியார் விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது மற்றும் 2024–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது ஆகிய ஏழு விருதுகளும் வழங்கி சிறப்பிக்கப்பட்டன.

### 1.5.8 தமிழ்த்தாய் விருது

தமிழ்மொழியின் தொல்லியலையும் பண்பாட்டுப் பார்வைகளையும் நாகரிக நெறிகளையும் பரப்பும் வண்ணம் தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற

மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழமைப்புகளை நிறுவி, தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புக்கு தமிழ்த்தாய் விருது 2012–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. விருதுத்தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம் மற்றும் தகுதியுரையுடன் கூடிய பாராட்டுக் கேடயமும் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு வரை 11 அமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

### 1.5.9 கபிலர் விருது

கபிலர் விருது என்னும் இவ்விருது தம் சந்தக் கவித்திறத்தால் சிந்தை குளிரவைக்கும் ஆற்றல் மிக்க சங்கத்தமிழில் சீர் வாய்ந்த தமிழறிஞர் ஒருவருக்கு 2012–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 11 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.10 உ.வே.சா. விருது

இன்று அச்சு வடிவில் நாம் பெற்று, படித்து இன்புறுகின்ற பல நூல்களைத் தம் கடின உழைப்பால், ஓலைச்சுவடிகளிலிருந்து திரட்டித் தந்தவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் சங்க இலக்கியங்களைத் தமிழ்த்தாயின் திருவடிகளுக்குச் சிலம்பாக அணிவித்தவர், உலகெங்கும் பரவிக்கிடந்த ஓலைச்சுவடிகளைத் திரட்டி அவை அச்சுப் பதிப்பாக வெளிவருவதற்கு அரும்பணியாற்றியவர், தமிழ்ப்பெருமையை உலகெங்கும் விளங்கச் செய்தவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்தம் நெறியில் கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச்சுவடிகள் எனக் கண்டறிந்து, ஆய்ந்து நூலாக்கம் செய்யும் ஆற்றல் மிக்க அறிஞருக்கு 2012–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் உ.வே.சா விருது வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டுவரை 11 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.11 கம்பர் விருது

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற கூற்று நாம் அறிந்ததே. கவிச்சக்கரவர்த்தி கம்பரின் உயர்தனிச் செம்மொழி நடையில், காவியங்கள் படைத்து வரும் நற்றமிழ் அறிஞர் ஒருவருக்கு 2013–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 'கம்பர் விருது' வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.12 சொல்லின் செல்வர் விருது

தமிழின் தொன்மை, பெருமை, தமிழர்தம் நாகரிகம், பண்பாடு போன்றவற்றைத் தங்களது நாவன்மையால் சொற்பொழிவுகள், உரைவீச்சுகள் மூலம் மக்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் உழைப்பினை ஈந்து வரும் ஒருவருக்குச் 'சொல்லின் செல்வர் விருது' 2013–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம்,

ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022-ஆம் ஆண்டு வரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.13 முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

'நான்காம் தமிழான கணினித் தமிழை' உலகெங்கும் கொண்டு சேர்க்கும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் முதலமைச்சர் அவர்கள். உலகெலாம் நம் தாய்மொழியான தமிழ்மொழியைக் கணினியில் கருத்துமொழியாக ஆக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் கணினித் தொழில்நுட்பத்தில், தமிழ் வளர்ச்சிக்காக மிகச்சிறந்த மென்பொருளை உருவாக்கித் தருபவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையிலும், கண்டுபிடிப்புகளைப் பாராட்டும் வகையிலும் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' 2013-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகிறது. 2022-ஆம் ஆண்டுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

2021 மற்றும் 2022–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகள் 18.07.2023 அன்று சென்னை, மாநிலக் கல்லூரியின் திருவள்ளுவர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவில் வழங்கி சிறப்பிக்கப்பட்டன.

### 1.5.14 உமறுப்புலவர் விருது

தமிழிலக்கியத்தில் சமயம் சார்ந்த இலக்கியங்களுக்கெனத் தனியொரு தகுதி வாய்ந்த இடம் உண்டு! அவ்வகையில், இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான 'சீறாப்புராணத்தை' யாத்துள்ள உமறுப்புலவரின் காவியத் தமிழ்த் தொண்டைப் போற்றி அவர்தம் கொள்கை நெறி சார்ந்து, தமிழ் இலக்கியத்திற்குப் பங்களித்துவரும் தமிழறிஞருக்கு உமறுப்புலவர் விருது 2014–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பெறுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.15 ஜி.யு.போப் விருது

இங்கிலாந்து நாட்டு அறிஞரான ஜி.யு.போப் அவர்கள், தமிழ்மொழியைக் கற்று, திருக்குறளின் விழுமியக் கருத்தினால் ஈர்க்கப்பட்டு, அதனைத் தம் மொழியான ஆங்கில மொழியில் மொழிப்பெயர்த்துத் தமிழ்மொழியின்பால் தாம் கொண்டிருந்த தீராக்காதலை வெளிப்படுத்திய பெருமகனாவார். அவரது தமிழ்ப்பணியைச் சிறப்பிக்கும் வகையில், அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு ஜி.யு.போப் விருது 2014–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பெறுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.16 இளங்கோவடிகள் விருது

இந்தியாவின் இணையிலா தேசியக் காப்பியமாகப் போற்றப்படும் காப்பியம் சிலப்பதிகாரமாகும். தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்து வரும் ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையான

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் நடையையொட்டிப் புதிய காப்பியங்களைப் படைக்கும் ஆற்றல் மிக்கவருக்கு, சிலப்பதிகாரத்தின் புகழை உலகெங்கும் பரவச்செய்கின்ற விதத்தில் உழைப்பைச் செலுத்திவரும் அறிஞருக்கு இளங்கோவடிகள் விருது 2015–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.17 தமிழ்ச்செம்மல் விருது

தமிழ்நாட்டில் தனியாகவும், தமிழமைப்பு வைத்தும் தமிழுக்குப் பாடுபடும் தமிழ்ச்சான்றோர் பெருமக்களைச் சிறப்புச் செய்யும் வகையில் மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில் 'தமிழ்ச்செம்மல் விருது' 2015–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 'தமிழ்ச்செம்மல் விருது' பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும் தகுதியுரையுடன் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டுச்

சிறப்பு செய்யப்படுகிறது. 2022-ஆம் ஆண்டு வரை, 279 செம்மல்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

### 1.5.18 அம்மா இலக்கிய விருது

பெண்ணியயெழுச்சியை உருவாக்கும் வகையில், பல தளங்களில் செயற்பட்டுக் கருத்தாழமிக்க படைப்புகளை அளித்துவரும், பெண் படைப்பாளி ஒருவருக்கு, 'அம்மா இலக்கிய விருது' 2016-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022-ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகிறது. 2022-ஆம் ஆண்டுவரை 7 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.19 சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் மொழிபெயர்ப்பாளர்களுள் 10 பேரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது'

2016–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 70 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.20 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் விருது

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் ஏழை எளிய தொழிலாளர்களுக்காகவும் தன் பாடுகளையும் படைப்புகளையும் வகுத்து வாழ்ந்த சிங்காரவேலர் வழியில் பாடுபடும் ஒருவருக்கு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது 2018–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பெறுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 5 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.21 அயோத்திதாசப் பண்டிதர் விருது

சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகியவற்றில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயலாற்றும் ஒருவருக்கு அயோத்திதாசப் பண்டிதர் விருது 2019–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 4 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.22 மறைமலையடிகளார் விருது

தனித்தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில், தனித்தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் மறைமலையடிகளார் விருது 2019–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும்

பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 4 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.23 அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது

சமரச நெறிகளால் ஆன்மீகத் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'அருட்பெருஞ்சோதி வள்ளலார்' விருது 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.24 காரைக்கால் அம்மையார் விருது

காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு 'காரைக்கால் அம்மையார் விருது' 2020–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு

சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.5.25 தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது

தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் திங்களிதழ்களில் ஒரு இதழைத் தெரிவு செய்து 'தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது' என்ற பெயரில் சிற்றிதழ்ப் பரிசு 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத்தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், தகுதியுரை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுவரை மூன்று இதழ்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

சென்னை, முத்தமிழ்ப் பேரவை அரங்கில் 2022ஆம் ஆண்டிற்கான 38 தமிழ்ச்செம்மல் விருதுகள், பத்து சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருதுகள், தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா

விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு.போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது, சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலையடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, காரைக்கால் அம்மையார் விருது, மற்றும் சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது என மொத்தம் 63 விருதாளர்களுக்கு 22.02.2024 அன்று விருதுகள் வழங்கப்பட்டன.

### 1.5.26 இலக்கிய மாமணி விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97–ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் 'இலக்கிய மாமணி விருது' உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு இலக்கிய மாமணி விருது வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதற்கிணங்க 2021–ஆம் ஆண்டு முதல் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்

பதக்கம், தகுதியுரை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்று வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில் சிறப்பு நேர்வாக 2023–ஆம் ஆண்டு கூடுதலாக மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருதுகள் வழங்கப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று 2022–2023–ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டது. 2023–ஆம் ஆண்டு வரை 12 அறிஞர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

**2024–2025–ஆம் ஆண்டில் விருதுகளுக்கென ரூ.1,32,15,000/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.6 கனவு இல்லம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு "கனவு இல்லம்

திட்டம்" தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, சாகித்திய அகாதெமி, ஞானபீட விருது, தொல்காப்பியர் விருது, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது (தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு மட்டும்) மற்றும் நோபல் பரிசு இலக்கியம் (தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியப் பணிகளுக்கு பெற்றிருப்பின்) ஆகிய விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு நிதியாண்டிலும் அதிகபட்சமாக 10 விருதாளர்களுக்கு வீடு வழங்கப்படுகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டிற்கு 9 விருதாளர்கள் மற்றும் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு 8 விருதாளர்கள் என மொத்தம் 17 விருதாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கிட செலவினத் தொகைக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று கனவு இல்லத் திட்டத்தில் 10 தமிழறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புக்கான அரசாணை வழங்கப்பட்டது.

2023–2024–ஆம் நிதியாண்டிற்கு 4 விருதாளர்களைப் பயனாளிகளாகத் தேர்வு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக, தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்று தமிழ்நாட்டில் வசிக்கும் விருதாளர்களுக்கு தமிழ்நாடு அரசால் வீடு வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ.15,00,00,000/– (ரூபாய் பதினைந்து கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.7 தமிழ் வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் பிற துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 1.7.1 திறனறித் தேர்வு

பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாய்டு தேர்வுகளுக்குப் பெருமளவில் தயாராகிக் கலந்து கொள்வதைப் போன்று தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்

கொள்ளும் வகையில் தமிழில் 'திறனறித் தேர்வு' 2022–ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வின் மூலம் ஆண்டுதோறும் 1500 மாணவர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு திங்கள்தோறும் ரூ.1500/– வீதம் 22 திங்கள்களுக்கு வழங்கப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் ஊக்கத் தொகையாக ரூ.4,95,00,000/–மும் தேர்வு செலவினமாக ரூ.68,00,000/–மும் என மொத்தம் ரூ.5,63,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2024–2025–ஆம் ஆண்டில் ரூ. 5,65,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 1.7.2 சங்க இலக்கிய நூல்களைச் சந்தி பிரித்து எளிமைப் பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ்ச் செவ்வியல் இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல்

சங்க இலக்கிய நூல்களைச் சந்தி பிரித்து எளிமை பதிப்பாக வெளியிடும் திட்டத்தின் வாயிலாக

செந்தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண நூல்களான தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்கள் தமிழ் ஆர்வலர்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் பொதுமக்களுக்கும் எளிதாகவும் ஒரே இடத்தில் தொகுப்பாகவும் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க முதற்கட்டமாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 06.01.2023–ஆம் நாளன்று பத்துப்பாட்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு நலத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 18.01.2024 அன்று குறுந்தொகை, பதிற்றுப்பத்து, இறையனார் அகப்பொருள் ஆகிய 3 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

### 1.7.3 தந்தை பெரியாரின் சிந்தனைகள் – தொகுப்பு நூல் வெளியிட நிதியுதவி

தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு 21 இந்திய மற்றும் பிற உலக மொழிகளில் அச்சு நூல்களாகவும் மின்னூல் பதிப்புகளாகவும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வாயிலாக வெளியிட ரூ.5,00,00,000/–க்கு

(ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிருவாக அனுமதி அளித்தும் 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.29,05,000/- (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது.

**முதற்கட்டமாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால்** தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு நூல் மராத்தி, உருது, ஜப்பானிஷ், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபு, ரஷ்யன், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட 10 மொழிகளில் 18.01.2024-அன்று வெளியிடப்பட்டது.

### 1.7.4 தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகரமுதலி

தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து அகரமுதலி உருவாக்கும் சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் மூலமாக நான்கு ஆண்டுகளில் செயற்படுத்திட ஆண்டுக்கு ரூபாய்

இரண்டு கோடி வீதம் ரூபாய் எட்டு கோடி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் முதல் வெளியீடாக தமிழ்–இந்தோ–ஐரோப்பிய வேர்ச்சொல் களஞ்சியம் ஒப்பீட்டு அகராதி – தொகுதி 1 நூலும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலும் தமிழ்நாடு அரசின் சார்பாகச் சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி நிகழ்வில் **18.01.2024–ஆம் நாளன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.**

### 1.7.5 தமிழறிஞர்களின் நினைவு மண்டபத்தைப் புதுப்பித்தல்

தாய்த்தமிழைக் காக்க இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரின் பங்களிப்பைப் போற்றும் வகையில் சென்னை, மூலக்கொத்தளத்தில் ஏற்கனவே அமைந்துள்ள திருவாளர்கள் தாளமுத்து – நடராசன் ஆகியோரின் நினைவு மண்டபத்தினை மேம்படுத்திப் பொலிவேற்றம் செய்திட ரூ. 34,30,000/– (ரூபாய்

முப்பத்து நான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 1.7.6 கவிஞர் தமிழ்ஒளி சிலை நிறுவுதல்

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவு சிலை அமைத்திட ரூ.7,62,800/- (ரூபாய் ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மொழிப்புல வரவேற்புக் கூடத்தில் நிறுவப்பட்டு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.**

## 1.8 இலக்கியப் பணிகள்

### 1.8.1 நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் மலிவு விலையில் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழ்நாடு அரசால் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 179

அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இதற்கென மொத்தம் ரூ.14,42,00,000/- (ரூபாய் பதினான்கு கோடியே நாற்பத்திரண்டு இலட்சம் மட்டும்) நூலுரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள்முதல் பின்வரும் அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| | **2021-2022-ஆம் ஆண்டு** | |
| 1. | சிலம்பொலி சு. செல்லப்பன் | 15 இலட்சம் |
| 2. | முனைவர் தொ. பரமசிவன் | 15 இலட்சம் |
| 3. | புலவர் இளங்குமரனார் | 15 இலட்சம் |
| 4. | திரு. முருகேச பாகவதர் | 10 இலட்சம் |
| 5. | திரு. சங்கரவள்ளி நாயகம் | 10 இலட்சம் |
| 6. | புலவர் செ. இராசு (வாழுங்காலத்தில் மருத்துவ சிகிச்சைக்காக வழங்கப்பட்டது) | 15 இலட்சம் |
| 7. | பேராசிரியர் க. அன்பழகன் | 25 இலட்சம் |
| 8. | முனைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் | 25 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | 2022– 2023–ஆம் ஆண்டு | |
| 9. | திரு. நெல்லை செ. திவான் | 15 இலட்சம் |
| 10. | விடுதலை இராஜேந்திரன் | 15 இலட்சம் |
| 11. | திரு. நா. மம்மது | 15 இலட்சம் |
| 12. | திரு. நெல்லைகண்ணன் | 15 இலட்சம் |
| 13. | திரு. கந்தர்வன் என்கிற நாகலிங்கம் | 10 இலட்சம் |
| 14. | திரு. சோமலெ | 10 இலட்சம் |
| 15. | முனைவர் ந. இராசையா | 10 இலட்சம் |
| 16. | தஞ்சை திரு. பிரகாஷ் | 10 இலட்சம் |
| | 2023–2024–ஆம் ஆண்டு | |
| 17. | பேராசிரியர் முனைவர் மா. நன்னன் | 10 இலட்சம் |
| 18. | இராவ் சாகேப் திரு. கு. கோதண்டபாணி பிள்ளை | 10 இலட்சம் |
| 19. | முனைவர் இரா. மோகன் | 10 இலட்சம் |
| 20. | திரு. கோ. முத்துப்பிள்ளை | 10 இலட்சம் |
| 21. | திரு. மா.சு. சம்பந்தன் | 10 இலட்சம் |
| 22. | திருமதி அம்சவேணி | 5 இலட்சம் |

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.08.2023 அன்று பேராசிரியர் முனைவர் மா.நன்னன் அவர்களின் துணைவியாரிடம் நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டது.

எஞ்சிய ஐந்து அறிஞர்களின் குடும்பத்தினருக்கு 12.02.2024 அன்று நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டது.

**2023 – 2024–ஆம் ஆண்டில் ரூபாய் 55,00,000/– நிதியொப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.**

## 1.9 தமிழ் இருக்கை நிறுவிட நிதியுதவி

ஒரு மொழிக்கான இருக்கையில், அந்த மொழியை பிரத்யேகமாக கற்பிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் என ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டு, இந்த பேராசிரியர் மூலம் சராசரியாக பத்து ஆராய்ச்சி மாணவர்களைக் கொண்டு ஆராய்ச்சிகளும், கருத்தரங்குகளும், மொழிசார்ந்த நிகழ்வுகளும் நடத்தப்படும். இதுபோன்ற இருக்கைகள், பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் உள்ள பல்கலைக்கழங்களில் அமைக்கப்படுவதன் மூலம் மொழியின் தரம் மேம்படுத்தப்படுவதோடு, அந்த மொழி தொடர்பான ஆய்வையும் மேற்கொள்ள முடியும்.

தமிழ்நாடு அரசால் பிற மாநிலங்கள், அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை அமைத்துத் தமிழைப் பாரெங்கும் பரப்பும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் இருக்கை அமைப்பதன் வாயிலாக தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு போன்றவை தொடர்பான ஆய்வுகள் மேம்படும் வகையில் அங்கு அமைக்கப்பெற்ற நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுவதுடன் அரிய நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின் வைப்புத்தொகையுடன் கீழ்க்காணும் நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களில் ஆய்விருக்கை / தமிழ் இருக்கை நிறுவப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **நிறுவனம்** | **ஆண்டு** | **வைப்புத் தொகை (ரூபாய்)** |
|---|---|---|---|
| | **இந்தியா** | | |
| 1. | இந்துப் பல்கலைக்கழகம், வாரணாசி | 1977 | 3,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகம், ஒடிசா | 1999 | 10,00,000/– |
| 3. | சவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி | 2003 | 50,00,000/– |
| | | 2022 | 5,00,00,000/– |
| 4. | தொல்காப்பியர் ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2013 | 50,00,000/– |
| 5. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2018 | 1,00,00,000/– |
| 6. | இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 2019 | 1,00,00,000/– |
| **அயல்நாடு** | | | |
| 7. | மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியசு | 2010 | 1,00,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 8. | ஹார்வர்டு பல்கலைக்கழகம், அமெரிக்கா | 2017 | 10,00,00,000/- |
| 9. | ஹூஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா | 2019 | 1,00,00,000/- |
| | | 2022 | 2,44,41,750/- |
| 10. | டொராண்டோ பல்கலைக்கழகம், கனடா | 2021 | 1,00,00,000/- |
| 11. | கொலோன் பல்கலைக்கழகம், ஜெர்மனி | 2021 | 1,25,00,000/- |

பனாரசு இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி ஆய்வுக்கூடம் 10.06.2023 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூபாய் 2,50,00,000/- (மூன்று இலட்சம் அமெரிக்க டாலர்) 15.11.2022 அன்று வழங்கப்பட்டது.
❖ புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழியைக் கற்பிக்க வகுப்பறைகள் மற்றும் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில்

ரூ.15.00 இலட்சம் நிதியுதவி 07.08.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

- ❖ நவிமும்பைத் தமிழ்ச் சங்கத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசின் பங்குத்தொகையாக ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதியுதவி வழங்கப்பட்டது. நவிமும்பைத் தமிழ்ச் சங்கத்தின் கட்டடம் மும்பையில் 23.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 1.10 நூல் கொடை

தமிழ் வளர்ச்சித் துறைக்கு சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின் வாயிலாக வரப்பெறும் நூல்கள் நூலகங்களுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. பேச்சுப் போட்டிக்கும், கட்டுரைப் போட்டிக்கும், அரசுப் போட்டித் தேர்வுக்கும் தயார் செய்யும் மாணவர்களுக்கு இந்நூல்கள் பயனுள்ளதாக இருக்கின்றன.

| வ.எண். | நூலகத்தின் விவரம் | அளிக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை | 5468 |
| 2 | சிறைத்துறை, எழும்பூர் | 2052 |
| 3 | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 2361 |
| 4 | கரூர் மாவட்ட நூலகம், கரூர் | 506 |
| 5 | திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் | 1015 |
| 6 | புனித அலோசியஸ் மேல்நிலைப் பள்ளி, கம்பம் (தேனி) | 1265 |
| 7 | விஸ்வபாரதி மத்தியப் பல்கலைக்கழகம், சாந்திநிகேதன், மேற்கு வங்காளம் | 1471 |
| | **மொத்தம்** | **14,138** |

# இயல் – 2

# மொழிபெயர்ப்புப் பிரிவு

**தோற்றம்**

*'தொகுத்தல், விரித்தல், தொகைவிரி மொழிபெயர்த்து*

*அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே'*

(தொல் : பொருள் : மரபியல் :98)

முதல்நூலில் உள்ளவற்றைத் (1) தொகுத்து நூலாக்கல், (2) விரித்து நூலாக்கல், (3) தொகுத்தும் விரித்தும் நூலாக்கல் (4) மொழிபெயர்த்தல் என்னும் நான்கு வகை வழிநூல்கள் பற்றித் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது.

இவற்றுள் நான்காவதாக இடம்பெற்றுள்ள மொழிபெயர்ப்பு இன்றி ஒரு மொழியின் முன்னேற்றம் என்பதே இல்லை என்று கூறும் அளவுக்கு மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக விளங்குகிறது. ஒரு மொழி வளம் பெறவும், உலக மொழிகளுடன் நட்பு பாராட்டவும் மொழிபெயர்ப்பு அவசியமாகும். அலுவலக நடைமுறைகள் தங்குதடையின்றி நடைபெற மொழிபெயர்ப்பின் பங்கு மகத்தானது. அவ்வகையில்,

தலைமைச் செயலகத் துறைகளின் அன்றாட அலுவல்சார் மொழியாக்கப் பணிகளை எவ்வித சிரமமுமின்றி மேற்கொள்வதற்காக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு உற்ற துணையாக தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு விளங்கி வருகிறது.

## 2.1 மொழியாக்கப் பொருண்மைகள்

தலைமைச் செயலகத் துறைகளிடமிருந்து உரிய குறிப்புடன், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் வரப்பெறும் கோப்புகள் / கடிதங்கள் தமிழிலும், தேவைப்படும் நேர்வுகளில் தமிழிலிருந்து ஏனைய மொழிகளுக்கும் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவால் குறித்த காலத்திற்குள் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றன.

மொழியாக்கப் பொருண்மைகள் வருமாறு:

- அரசாணைகள்
- அறிவிக்கைகள்
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள்
- சட்டமன்றப் பேரவை வினாக்கள்
- மாண்புமிகு ஆளுநர் உரை
- மாண்புமிகு நிதியமைச்சரின் நிதிநிலை அறிக்கை உரை
- வெள்ளையறிக்கை
- கொள்கை விளக்கக் குறிப்புகள்
- பொதுக்கணக்குக் குழு அறிக்கைகள்

- பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள்
- பல்வேறு விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள்
- மாநிலத் தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- விழிப்புப்பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை
- மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- காபிபோசா (COFEPOSA) ஆவணங்கள்
- தேர்தல் ஆணையத்தின் பல்வேறு தேர்தல் கையேடுகள் போன்றவை

மொழிபெயர்ப்புப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்களுக்கு பிரிட்டிஷ் கலை நிறுவன ஆங்கில பயிற்சி பாராட்டுச் சான்றிதழ் 14.08.2023 அன்று வழங்கப்பட்டது.

# இயல் – 3

# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

## 3.1 தோற்றம்

**"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்**
**அறிவுயரும் அறமும் ஓங்கும் !"**

– பாவேந்தர் பாரதிதாசன்

அகராதிப்பணி என்பது மொழியைக் காக்கும் நுட்பமான ஆய்வுப்பணியாகும். அகராதிப்பணி வழியாக அருந்தமிழின் சொல்வளத்தைப் பாதுகாப்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974–ஆம் ஆண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தொடங்கப்பெற்றது.

இயக்ககத்தின் செயற்பாடுகளை உணர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்பதே நம் இலக்கு. இவ்விலக்கினை எய்தும் வகையில் செந்தமிழ்ச்

சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தொடர்ந்து தமிழ்ப்பணிகளை ஆற்றி வருகிறது" என்று பாராட்டியுள்ளார்.

தாய்மொழி மேம்பாட்டுக்காக அகராதிகள் உருவாக்குதல், தமிழ்க் கலைச்சொல்லாக்கம் ஆகிய பணிகளைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் செய்துவருகிறது.

## 3.2 நோக்கம்

சொற்கள் புழங்கப்படும் வரை மொழிகள் வாழும். சொற்களைக் காத்தால்தான் மொழிகளைக் காக்க முடியும். சொற்கள் காலந்தோறும் நிலைக்க அகராதிகள் இயற்றப்பட வேண்டும். மொழிபெயர்ப்பு உயிர்ப்புடன் அமைய கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாகும். அகராதி உருவாக்கம், கலைச்சொல்லாக்கம் என்ற இரு முதன்மையான ஆக்கப் பணிகளை செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் செய்து வருகிறது.

## 3.3 இயக்ககச் செயற்பாடுகள்

### 3.3.1 வெளியீடுகள்

- மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, நடைமுறைத் தமிழ் அகரமுதலி, தமிழ்– தமிழ் பையடக்க அகராதி, அயற்சொல் அகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி, தமிழ் மரபுத்தொடர் அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி ஆகியவை அச்சிடப்பட்டு மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டுள்ளன.
- 48 அரசுத் துறைகளுக்கான கலைச்சொல் குறுநூல்கள் அச்சிடப்பட்டு, விலையின்றி அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சுருக்கப் பதிப்பு தமிழ் வினைச்சொல் அகரமுதலி அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
- வண்ணப்படங்களுடன் கூடிய 'நற்றமிழ் அறிவோம்' என்னும் தூய தமிழ் அகரமுதலி அச்சிடப்பட்டு மாநிலம் முழுமையும் உள்ள

1 முதல் 5–ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டுள்ளன.

- ❖ வேர்ச்சொல் சுவடி அச்சிடப்பட்டு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டுள்ளன.

இவ்வியக்கக நூல்கள் அனைத்தும் விக்கிப்பீடியா, விக்கிமூலம் மற்றும் சொற்குவை.காம் வலைத்தளத்தின் வழியாக உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.3.2 தமிழ்ப்பேசி – செயலி

தமிழ்நாட்டிற்கு வரும் பிறமொழியினருக்குப் பயன்படும் வகையில் பன்மொழி அகராதியுடன் கூடிய "தமிழ்ப்பேசி" குறுஞ்செயலி வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் திறன்பேசியிலுள்ள செயலிக்குவையிலிருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழியினர் தமிழ்நாடு வரும்போது, தமிழை அறிந்துகொள்ளும் வகையில்,

அடிப்படைப் பயன்பாட்டிற்குத் தேவையான சொற்கள் தமிழில் ஒலிபெயர்ப்பாகவும், அவரவர் மொழிகளில் மொழிபெயர்ப்பாகவும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மேற்குறித்த மொழிகளில் உள்ள சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் குரல்வடிவாகவும் இச்செயலி வழங்குகிறது.

### 3.3.3 தமிழ்க் கலைக்கழகம்

பழமை வாய்ந்த மொழியான தமிழ்மொழியைக் காக்கும் நோக்கில் அன்றாடம் பயன்பாட்டிற்கு வரும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைத் தரப்படுத்தி ஊடகங்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும் வழங்கும் நோக்கில் தமிழ்க் கலைக்கழகம் 2016–ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டது. தமிழ்க் கலைக்கழகத்தின் வல்லுநர் குழுக்கூட்டம் திங்களுக்கு இரண்டுமுறை கூடி, மக்களிடையே புழங்கும் பிறமொழிச் சொற்களுக்கான தூயதமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து, வல்லுநர் குழுவின் சீராய்வுக்குப் பின் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

தரப்படுத்தப்பட்ட தமிழ்க் கலைக்கழகச் சொற்கள் சொற்குவை வலைத்தளம், முகநூல், புலனம், சொல்வயல் திங்கள் மின்னிதழ் ஆகியவை வழியாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இதனால் கல்வித் துறையினர், ஊடகத் துறையினர், ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள், அரசுப் பணியாளர்கள் உள்ளிட்டோர் பயன்பெற்று வருகின்றனர். தொடங்கிய நாள் முதல் 2024 மார்ச் வரை 154 கூட்டங்களில் 48,301 சொற்களுக்குரிய தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 3.3.4 சொற்குவை வலைத்தளம்

**"உலகுக்குத் தமிழ்மொழியின்**
**உயர்வுதனைக் காட்டுவது சொற்பெருக்காம்!"**

– பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்மொழியின் சொற்கள் அனைத்தையும் ஒரே தளத்தின் கீழ் தொகுத்துத் திரட்டி, பயன்பாட்டுக்கு வழங்கும் வகையில் சொற்குவை வலைத்தளம் செயற்பட்டு வருகிறது. சொற்குவை வலைத்தளத்தில் 2024 ஜூன் 20–ஆம் நாள் வரை பல்வேறு துறைகள் சார்ந்த 15,32,717 சொற்கள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன.

### 3.3.5 தமிழ் அகராதியியல் நாள் விழா

சதுரகராதி உள்ளிட்ட பல்வேறு அகராதிகளை இயற்றியவரும், தமிழ் அகராதியியலின் தந்தை என்று போற்றப்படுபவருமாகிய வீரமாமுனிவரின் தமிழ்ப் பணியைப் போற்றும் வகையில் அவரின் பிறந்த நாளான நவம்பர் 8–ஆம் நாள் அகரமுதலி இயக்ககத்தால் 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடப்படுகிறது.

**(அ) அகராதி ஆய்வு மலர்**

தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், அகராதியியலாளர்கள் உள்ளிட்டோரின் கட்டுரைகள் அடங்கிய 'அகராதி ஆய்வு மலர்' அச்சிடப்பட்டு, கட்டுரையாளர்கள் மற்றும் தமிழ் அன்பர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**(ஆ) பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்**

பள்ளி மாணவர்களின் கலைத்திறனையும் கலைச்சொல்லாக்கத் திறனையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவிலான ஓவியப் போட்டியும் கலைச்சொல்லாக்கப் போட்டியும் நடத்தப்பட்டு, இரண்டு போட்டிகளிலும் வெற்றியாளர்களுக்கு முறையே

முதல் பரிசாக ரூ.10,000/- மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/- மும் வழங்கப்படுகின்றன.

## 3.4 விருதுகள்

### 3.4.1 தேவநேயப் பாவாணர் விருது

தமிழ் வேர்ச்சொல்லாய்வில் தனித்தடம் பதித்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரை அடியொற்றி தமிழ்ச் சொல்லாய்விலும், தமிழ் அகராதி படைத்தலிலும் சிறந்து விளங்கிவரும் தகுதிவாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு, "தேவநேயப் பாவாணர் விருது" 2020-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது. 2022-ஆம் ஆண்டு முதல் விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கிச் சிறப்புச் செய்யப்படுகின்றது. 2023-ஆம் ஆண்டு வரை 4 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.2 வீரமாமுனிவர் விருது

வீரமாமுனிவரின் படைப்பாக்க நெறியைப் பின்பற்றி தமிழ் அகராதிகளை வெளியிட்டுள்ள,

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்தவர், வெளிநாடு வாழ் அகராதியியல் அறிஞர், இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் அகராதியியல் அறிஞர், தமிழ்நாட்டில் வாழும் அகராதியியல் அறிஞர் ஆகியோரிலிருந்து தகுதிவாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து வீரமாமுனிவர் விருது 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது. 2022–ஆம் ஆண்டு முதல் விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கிச் சிறப்புச் செய்யப்படுகின்றனர். 2023–ஆம் ஆண்டு வரை 2 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.3 தூயதமிழ்ப் பற்றாளர் விருது

அன்றாட வாழ்க்கையில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தாமல் நல்ல தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துவோரிடம் அலைபேசிவழி நேர்காணல் செய்து, நடுவர்கள் வழங்கும் மதிப்பெண் அடிப்படையில், மாவட்டந்தோறும் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் 'தூயதமிழ்ப் பற்றாளர் விருது' 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவருகிறது.

விருதுடன் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூ.20,000/− (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) பாராட்டுச் சான்றிதழ் ஆகியன வழங்கிச் சிறப்புச் செய்யப்படுகின்றனர். 2023−ஆம் ஆண்டுவரை 105 தமிழ்ப் பற்றாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.4 தூயதமிழ் ஊடக விருது

பிறமொழிச் சொற்கலப்பின்றி, தூயதமிழ்ச் சொற்களைக் கொண்டு மக்களுக்கான செய்திகளை வழங்கும் ஊடகங்களிலிருந்து ஆண்டுதோறும் காட்சி ஊடகம் (தொலைக்காட்சி) ஒன்றையும், அச்சு ஊடகம் (செய்தித்தாள்) ஒன்றையும் தேர்ந்தெடுத்து 'தூயதமிழ் ஊடக விருது' 2020−ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. விருதுத் தொகையாக ரூ.50,000/− (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் ரூ.25,000/− (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பிலான தங்கப் பதக்கத்துடன் தகுதியுரையும் வழங்கிச் சிறப்புச் செய்யப்படுகின்றனர். 2023−ஆம் ஆண்டுவரை 3 அச்சு ஊடகங்களும் 2 காட்சி ஊடகங்களும் இவ்விருதைப் பெற்றுள்ளன.

### 3.4.5 நற்றமிழ்ப் பாவலர் விருது

பிறமொழிக் கலப்பில்லாத தூயதமிழ்ச் சொற்களையும், பாடுபொருளுக்கேற்ப புதிய புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் கொண்டு கவிதை இயற்றும் கவிஞர்களுள் மரபுக் கவிஞர் ஒருவரையும், புதுக்கவிஞர் ஒருவரையும் தேர்ந்தெடுத்து 'நற்றமிழ்ப் பாவலர் விருது' 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. விருதுத் தொகையாக ரூ.50,000/–, (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் ரூ. 25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பிலான தங்கப் பதக்கத்துடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்புச் செய்யப்படுகின்றனர். 2023–ஆம் ஆண்டுவரை மரபுக் கவிதைக்கு 4 அறிஞர்களும் புதுக்கவிதைக்கு 4 அறிஞர்களும் என மொத்தம் 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

2022–ஆம் ஆண்டுக்கான தூய தமிழ்ப் பற்றாளர் விருது, தூய தமிழ் ஊடக விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது ஆகியவை சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 08.11.2023 அன்றும் 2023–ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருது, வீரமாமுனிவர் விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது, தூய

தமிழ்ப் பற்றாளர் விருது ஆகியவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 07.03.2024 அன்றும் வழங்கப்பட்டன.

## 3.5. 'சொல் வயல்' திங்கள் மின்னிதழ்

2020–ஆம் ஆண்டு சூன் மாதத்திலிருந்து திங்கள்தோறும் "சொல்வயல்" மின்னிதழ் வெளியிடப்பட்டுவருகிறது.

உலகத்தின் எந்த மூலையிலிருந்து யார்வேண்டுமானாலும் பார்த்து, பதிவிறக்கி படித்துப் பயன்பெறும் வகையில் "சொல்வயல்" மின்னிதழ் சொற்குவை வலைத்தளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. அகராதியியல், சொல்லாக்கங்கள், சொல்லாய்வுகள், மொழியியல் போன்ற செய்திகளை உள்ளடக்கிய சொல்வயல் மின்னிதழ் புலனம் வழியாகவும் பகிரப்பட்டுவருகிறது.

2024 மே வரை 48 இதழ்கள் வெளிவந்துள்ளன.

## 3.6. சொற்குவை மாணவத்தூதுவர் பயிற்சித் திட்டம்

கலைச் சொல்லாக்க ஆற்றலைக் கல்லூரி மாணவர்களிடம் கொண்டுசேர்த்து அவ்வாற்றலை

வளர்த்தெடுக்கும் வகையில் 'சொற்குவை மாணவத் தூதுவர்' பயிற்சித் திட்டம் 2021–ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது.

2024–ஆம் ஆண்டு 10 கல்லூரிகளில் நடைபெற்ற 'சொற்குவை மாணவத் தூதுவர்' பயிற்சித் திட்டத்தின் மூலம் 5200–க்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர் பயனடைந்துள்ளனர். பங்கேற்ற மாணவ – மாணவியர்க்குச் "சொற்குவை மாணவத் தூதுவர்" என்ற சான்றிதழ் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 3.7. துறைசார் வல்லுநர் குழுக் கூட்டம்

பல்வேறு துறைசார்ந்த தமிழ்க் கலைச்சொற்களை அந்தந்தத் துறைசார்ந்த வல்லுநர்களின் உதவியுடன் வடிவமைத்துத் தொகுத்து, சொற்குவை வலைத்தளத்தில் சேர்க்கும் வகையில் மூன்று திங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் ஆண்டுக்கு நான்குமுறை துறைசார் வல்லுநர் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், சட்டத்துறை, பதிவுத்துறை, தடய அறிவியல் துறை, எரிசக்தி மேம்பாட்டு முகமை ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்குழுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 3,561 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

இக்கலைச்சொற்கள் வல்லுநர்களின் சீராய்வுக்குப் பின் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், அக்கலைச்சொற்கள் அடங்கிய கையேடுகள் 50 படிகள் வீதம் அச்சிடப்பெற்று அந்தந்தத் துறையினரிடம் வழங்கப்பட்டுள்ளன.

**"குலமெனப் படுவதும் தமிழே! கோவெனப் படுவதும் தமிழே!**
**நலமெனப் படுவதும் தமிழே! நாடெனப் படுவதும் தமிழே! "**

– மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

முத்தமிழின் முன்னேற்றத்தையே முப்பொழுதும் எண்ணி தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் போலவே மக்கள் போற்றும் மக்களாட்சியை வழங்கிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செம்மாந்த வழிகாட்டுதலின்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் அருந்தமிழுக்கான ஆக்கப் பணிகளைச் சீரிய முறையில் செயற்படுத்தி வருகிறது.

# இயல் 4

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## 4.1 தொடக்கம்

சென்னையில் 1968–ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரெஞ்சு மொழிக் கலைக் கழகத்தைப் போல தமிழுக்கு ஓர் உயராய்வு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். இதனையடுத்து, 1970–ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் தொடங்கப் பெற்றது.

## 4.2 நோக்கங்கள்

❖ வளர்ந்துவரும் சூழலுக்கேற்ப உயர் தமிழாய்வினை ஊக்குவித்தல், அதற்கான கல்விச் சூழலை உருவாக்குவது.

- ❖ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு மற்றும் கல்விச் சூழல் பாதிக்காத வகையில், இதன் நோக்கங்களைப் பின்பற்றும் அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், மற்ற கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் ஆகியோருடன் ஒருங்கே இணைந்து செயலாற்றல்.
- ❖ உயர்தரமான நூலகத்தைப் பெற்றிருத்தல்.

## 4.3 நிறுவன ஆளுகைக் குழு

| | |
|---|---|
| தலைவர்: | மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் |
| துணைத் தலைவர்கள்: | அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை; சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணை வேந்தர்கள் |
| உறுப்பினர்கள்: | நிதித் துறைச் செயலாளர்,<br>உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் (ஐ.ஏ.டி.ஆர்) பிரதிநிதி. |

| | |
|---|---|
| | இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் |
| உறுப்பினர் செயலாளர்: | உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர். |

மேற்குறித்த ஆளுகைக் குழுவின் நெறிகாட்டுதலுடன், தன்னாட்சி நிறுவனமாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இயங்குகிறது.

## 4.4 நிறுவனத்தில் செயல்படும் புலங்கள்

(1) இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், வரலாறு முதலிய பொருண்மைகள் உடைய தமிழ்ச் சுவடிகளைப் படியெடுத்தல் / பாதுகாத்தல் மற்றும் நூலாக்கம் செய்து வெளியிடல். மாணவர்கள் மற்றும் பிற துறைகள் சார்ந்த ஆர்வலர்களுக்குச் சுவடிகளைப் படிக்க, எழுத, பதிப்பிக்கப் பயிலரங்குகள், பட்டய வகுப்புகள் நடத்திப் பயிற்றுவித்தல். சுவடிகள் தொடர்பான கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய நோக்கங்களை செயல்படுத்தும் பொருட்டு **'தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம்'** உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) பொது மொழியியல் மற்றும் பயனாக்க மொழியியல் பொருண்மைகளில் தேசிய / பன்னாட்டு அளவிலான கருத்தரங்கம் / பயிலரங்கம் நடத்தி நூலாக்கம் செய்தல். பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டோர்க்குத் தமிழ்க் கற்பித்தல். மொழித் தொடர்புத் திறன், மொழி ஆய்வு மற்றும் நெறிமுறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களை செயல்படுத்தும் பொருட்டு **'தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம்'** உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(3) தமிழ்நாட்டிலுள்ள கலை மரபுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வுக்கு உட்படுத்துதல். தமிழ்ச் செவ்வியல் மற்றும் தமிழர் கலைகள் குறித்து மரபுக் கலைஞர்களைக் கொண்டு பயிற்சி அளித்தல் மற்றும் பயிலரங்குகள் நடத்துதல். தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டு மரபுகளைத் தென்னிந்திய மற்றும் பிற மரபுகளுடன் இணைத்து ஆய்வு செய்யும் பொருட்டு

**'சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்'** உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(4) கருத்தரங்குகள், சிறப்புச் சொற்பொழிவுகள், பயிலரங்குகள் நடத்தி இதன் வழி எடுத்துக்கூறும் கருத்துகளை நூலாக்கம் செய்தல். அயலகத் தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு, கலை, சமூக (ம) இலக்கிய அமைப்புகள் தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல். அயலகத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் ஆய்வுப் பணிகளைத் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்தும் பொருட்டு **'அயல்நாட்டுத் தமிழர் புலம்'** உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 4.5 தமிழ்க் கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துணைமைப் பணிகள்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் இவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி இந்நிறுவனத்தில்

முழுநேர / பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 252 மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழக வழி தமிழ் முதுகலைப்பட்ட வகுப்பு, ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப்பட்ட வகுப்பு ஆகியனவும் நடத்தப்படுகின்றன.

- 2024-2025-ஆம் ஆண்டில் 32 மாணவர்கள் முனைவர் பட்ட வகுப்பில் பயின்று வருகின்றனர். 2023-2024-ஆம் ஆண்டு முதுகலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு வகுப்பில் 24 மாணவர்களும், ஒருங்கிணைந்த முதுகலை வகுப்பில் மொத்தம் 15 மாணவர்களும் கல்வி பயின்றனர்.
- தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல், கல்வெட்டியல் (ம) தொல்லியல் ஆகிய ஓராண்டுப் பட்டய வகுப்புகளும் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 353 மாணவர்கள் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பிலும், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பில் w1201

மாணவர்கள் பயின்றுள்ளனர். 2024–2025–ஆம் ஆண்டில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் முறையே 193 மாணவர்களும் 27 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

## 4.6 மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதியுதவி

- ❖ முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களுள் தெரிவின் அடிப்படையில் எட்டு மாணவர்களுக்கு ரூ.5,000/– வீதம் (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) திங்கள்தோறும் ஆய்வு உதவித்தொகை வழங்கப்பெற்று வருகிறது.
- ❖ தமிழ் முதுகலைப் பயிலும் பதினைந்து முதலாமாண்டு மாணவர்கள், பதினைந்து இரண்டாமாண்டு மாணவர்கள் என 30 மாணவர்களுக்கு கல்வியாண்டில் திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ.2000/–வீதம் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

- ❖ தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் வகுப்பில் பயிலும் மாணவர்களுள் தெரிவு செய்யப்படும் பத்து மாணவர்களுக்குக் கல்வியாண்டில் திங்கள்தோறும் ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்பெற்று வருகிறது.

## 4.7 விரிவுரையாளர்/ஆராய்ச்சிக்கானத் தகுதித் தேர்வுகள் பயிற்சி

மாணவர்களுக்கான உயராய்வு உதவித்தொகை பெறுதல் மற்றும் கல்லூரி/பல்கலைக்கழகங்களில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கு அடிப்படைத் தகுதிகளை அறுதியிடப் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர், ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கானச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் எவ்விதக் கட்டணமுமின்றி கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமின்றி பிற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 525 மாணவர்கள் இவ்வகுப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 4.8 தமிழ் மொழிக் கற்பித்தல்

உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்த செம்மொழியான தமிழ்மொழியின் மீது கொண்ட ஈர்ப்பால் அதனை விரும்பிக் கற்க விழையும் இந்தியாவின் பிற மாநிலத்தவரும், பிற நாட்டவரும் கற்றுக் கொள்வதற்கான ஏற்ற சூழலைக் கொண்டுள்ள மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடத்தில் தமிழ்மொழி கற்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மூன்று திங்கள் கால அளவு கொண்ட அறிமுக நிலை வகுப்பும், ஆறு திங்கள் கால அளவு கொண்ட சிறப்புநிலை வகுப்பும் என இரு பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன.

இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், உலக நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, தென்ஆப்பிரிக்கா, சுவீடன், சீனா, கொரியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளிலிருந்தும் நேரடியாகத் தமிழ்மொழி பயின்றுள்ளனர்.

## 4.9 திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுமார் 2500 சதுரஅடி பரப்பளவில் திருக்குறள் ஓவியக் காட்சிக்

கூடம் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதியைக் கொண்டு இக்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான நிழற்படங்கள், 150 ஓவியங்கள், 1500க்கும் மேற்பட்ட திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான நூல்கள் காட்சிப்படுத்தப் பெற்றுள்ளன. இதனை ஏராளமான பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்கள் கண்டு களித்து வருகின்றனர்.

## 4.10 ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்

தமிழின் சிந்தனை அறிவுக் களஞ்சியங்களாக விளங்கும் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் மற்றும் நாலடியார் போன்றவை பண்டையக் காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டன. கரையான்களும், வண்டுகளும், துளைத்தவை போக எஞ்சியுள்ள ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதும், பதிப்பிப்பதும் இன்றியமையா கடமையாகும் என்ற நிலையில்

தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.34,00,000/- (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) நிதி உதவியுடன் 800 சதுர அடி பரப்பளவில் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் இலக்கியம் - 20,185, கணிதம்-2,076, சோதிடம்-1,133, இலக்கணம் - 5,494, தத்துவம்-4,138 மற்றும் பிறமொழி-5,240 என மொத்தம் 38,266 ஏடுகள் உள்ளன. இங்குள்ள அனைத்துச் சுவடிக் கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணையும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் நிதி நல்கையைக் கொண்டு தமிழகத்திலும் பிற இடங்களிலும் உள்ள இன்னும் அறியப்படாத சுவடிகளைக் களப்பணி வாயிலாக அடையாளம் கண்டு அவற்றை மின்னெண்மம் செய்து இம்மையத்தில் பாதுகாத்து வரப்படுகிறது.

## 4.11 பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம்

உலகின் தொல்குடிகளான தமிழர்கள் உலகம் பாராட்டும் வகையில் அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்து விளங்கினர். உலக மக்களுக்குப் பல

வகையிலும் வழிகாட்டியுள்ளனர். இத்தகைய பழந்தமிழர்களின் பல்வேறு சிறப்புகளை, ஆற்றல்களை உலகில் பறைசாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் கற்சிற்பங்கள், மாழைச்(உலோக) சிற்பங்கள், மரச்சிற்பங்கள், அணிகலன்கள், புடைப்புச் சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் தமிழ்நாடு அரசு வழங்கிய ரூபாய் 346 இலட்சம் சிறப்பு நல்கையில் 10,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்காட்சிக்கூடத்தில் 1. பழந்தமிழர் வாழ்வியல், 2. தமிழ் மருத்துவம், 3. நீர்மேலாண்மை 4. போரியல், 5. ஆட்சித் திறன். 6. பழந்தமிழர் நெசவுத் தொழில் நுட்பம் 7. பழந்தமிழர் கட்டடக் கலைநுட்பம், 8. பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், 9. பழந்தமிழர் வேளாண்மை, 10. தமிழர் மரபுக் கலைகள் முதலிய தலைப்புகளில் குறும்படங்கள் தயாரித்து திரையிடப்பட்டு வருகின்றன. இதனால் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் பழந்தமிழர் வாழ்வியல் பற்றி அறிய களம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.12 அறக்கட்டளைகள்

'ஈதல் இசைபட வாழ்தல்' என்பதற்கிணங்க, தமிழ்ச் சான்றோர்களை நினைவு கூர்ந்து போற்றும் வகையில் அவர்கள் பெயரில் தனியாக மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கிய வைப்புத் தொகையில் இதுவரை 54 அறக்கட்டளைகள் இந்நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ரூ.50,000 தொகைக்குள் | – 12 |
| ரூ.50,000 – ரூ.1,00,000 தொகைக்குள் | – 32 |
| ரூ.1,00,000 – ரூ.3,00,000 தொகைக்குள் | – 4 |
| ரூ.3,00,000 – தொகைக்கு மேல் | – 6 |

அறக்கட்டளைகளும் உள்ளன.

இவ்வறக்கட்டளைகள் வாயிலாகப் பல்வேறு பொருண்மைகளில் சிறப்புப் பொழிவுகள் நடத்தப்பட்டு, நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 610 சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

## 4.13 ஆய்விருக்கைகள்

உயராய்வுகளை மேற்கொண்டுவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிகளுக்குத் துணைபுரியும் வகையில், அதன் நோக்கங்களை

நிறைவேற்ற 2013–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் சார்பிலும், தனியரால் வழங்கப்பட்ட கொடைகளைக் கொண்டும் ஆய்விருக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 15 ஆய்விருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) வைப்புநிதியை வைத்து ஏற்படுத்தப்பட்ட தொல்காப்பியர் ஆய்வு இருக்கையின்வழி இதுவரை 18 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதேபோல் தமிழ்நாடு அரசு வழங்கிய ரூபாய் ஒரு கோடி வைப்புநிதியில் ஏற்படுத்தப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கையின்வழி 9 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 4.14 நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சிறப்புகள் பல. அவற்றுள் ஒன்று நூல்கள் வெளியிடுவது. கருத்தரங்கக் கட்டுரைகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரிய நூல்களின் மறுபதிப்பு மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்கள்

ஆகியன அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இதன் வாயிலாகத் தமிழறிஞர்கள், தமிழாய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழி பெயர்ப்பு, தமிழ் மருத்துவம், காலக்கணிதம் என்னும் பொருண்மைகளில் அமைந்துள்ளன. இந்நாள்வரை 1302 நூல்கள் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பழந்தமிழர் இலக்கியங்களின் ஒலி நூல்கள் மற்றும் கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புவெளி நூல் ஆகியவை 07.03.2024 அன்று வெளியிடப்பட்டன.

## 4.15 தமிழியல்

தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகளார் தமிழியல் இதழ் அமைய தடம் அமைத்துக் கொடுத்தவர் ஆவார். அவர் Journal of Tamil Studies (Jots) என்று ஆங்கிலத்தில் அமைந்த இதழ் தொடங்கினார். அவர் வழங்கிய கொடைதான் இன்று தமிழியல் என்ற பெயரில் தமிழ் (ம) ஆங்கிலம் என இருமொழிகளில்

காலாண்டு இதழாக ஐம்பது ஆண்டுகளைக் கடந்து 122–ஆவது இதழ் வெளிவந்துள்ளது. தமிழியல் இதழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், நிறுவன வெளியீடுகளின் அறிமுகம் ஆகியன இடம் பெற்று வருகின்றன. அனைத்து தமிழியல் நூல்களும் www.ulakaththamizh.in என்ற வலைதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

## 4.16 ஆய்வு நூலகம்

சிந்தனையை வளர்க்கும் நூல்கள் ஆய்வுக் களஞ்சியம் எனப்படும். நிறுவன நூலகத்தில் தற்போது 1,50,000 நூல்கள் உள்ளன. இவ்வாராய்ச்சி நூலகம் ஆய்வுப் பணிகள் சீரும் சிறப்புடன் மேற்கொள்ள பயன்படுகிறது. ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், இந்திய குடிமைப் பணி தேர்வுக்குப் பயில்வோர் இந்நூலகத்தால் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு அரசு 2022–23–ஆம் நிதியாண்டில் வழங்கிய ரூ.50.00 இலட்சம் நிதியுதவியில் இந்நூலகத்தில் உட்கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டதோடு இதிலுள்ள நூல்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

# இயல் – 5

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## 5.1 தோற்றம்

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15–ஆம் நாளில் 1981–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரைத் தமிழ்நாடு என்று மாற்றுவதற்கு தியாகி சங்கரலிங்கனார் போன்ற தியாகிகள் உயிர்நீத்த போராட்டங்கள் மறந்துவிடக்கூடியது அல்ல. பேரறிஞர் அண்ணாவின் மிகப்பெரிய ஆசை தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவது; அவர் ஆசைப்பட்டதைப்போல் தமிழ்நாடு பெயர் உதயமானது. அவருடைய கனவைச் சுமந்து கொண்டிருக்கின்ற தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடங்களுக்குத் தமிழ்நாடு என்ற எழுத்துக்களில் வடிவங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது த–மி–ழ்–நா–டு என்ற ஐந்து எழுத்துக்களில் ஐந்து புலங்கள் அமைந்திருக்கின்றன. தமிழாய்வுக்காக உருவாக்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தில் 22 துறைகள் உள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள்

I கலைப்புலம்

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை

II சுவடிப்புலம்

4. ஓலைச் சுவடித்துறை
5. அரியகையெழுத்துச் சுவடித்துறை
6. கல்வெட்டுத்துறை
7. நீரகழாய்வு மையம்

III வளர்தமிழ்ப்புலம்

8. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
9. மொழிபெயர்ப்புத்துறை
10. தொகுப்பியல் துறை
11. சமூகவியல் துறை
12. அறிவியல் தமிழ் – தமிழ் வளர்ச்சித்துறை

IV மொழிப்புலம்

13. இலக்கியத்துறை

14. மொழியியல் துறை

15. தத்துவ மையம்

16. நாட்டுப்புறவியல் துறை

17. இந்திய மொழிகள் பள்ளி

V அறிவியல் புலம்

18. சித்தமருத்துவத் துறை

19. தொல் அறிவியல் துறை

20. தொழில்நில அறிவியல் துறை

21. கட்டடக்கலைத் துறை

22. கணிப்பொறி அறிவியல் துறை

தமிழ்ப் பண்பாட்டின் வேர்களையும் விழுதுகளையும் மிக நுட்பமாக ஆய்வு செய்யும் பல்கலைக்கழகமாக தமிழ்ப்பல்கலைக்கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

## 5.2. குறிக்கோள்கள்

- ❖ தமிழ்நாட்டில் உள்ள ஓலைச்சுவடிகளைத் தேடித் தொகுத்தல்.
- ❖ தமிழ் மொழியிலேயே அறிவியல் பட்டங்களுக்கான பாடங்களை உருவாக்குதல். அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், மொழியியல் எனப் பல்வேறு பாடங்களை உருவாக்குதல். இந்தப் பாடங்களை மாணவர்கள் தமிழிலேயே படிப்பதற்கு வழிவகை செய்தல்.
- ❖ தமிழின் பழமையைப் பிற மொழியாளர்களுக்கு உணர்த்துதல்.
- ❖ பிற மொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு ஆராய்தல்.
- ❖ அழிந்துகொண்டிருக்கும் நம்முடைய பழைய பண்பாட்டு மரபுகளை ஆவணப்படுத்துதல்.
- ❖ தமிழரின் அடையாளங்களான மரபுக் கலைகளை மீட்டெடுத்தல், பயிற்சி அளித்தல்.

- ❖ மரபுசார்ந்த மருத்துவத்தையும், பண்பாட்டையும் சமரசமின்றி அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லுதல்.
- ❖ நம்முடைய தொல்லியல் எச்சங்களைக் கண்டறிதல்.
- ❖ ஓலைச்சுவடிகளில் உள்ள இலக்கியங்களை மின்னாக்கம் செய்வதன் மூலம் நமது பண்டைய இலக்கியங்களைக் காத்தல்.

## 5.3. 2023–2024–ஆம் ஆண்டில் மாணவர்கள் நேரடிச் சேர்க்கை விவரம்

| அ) | பல்கலைக்கழகத்தால் நடத்தப்பெறும் படிப்புகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முனைவர் பட்டம் | 105 |
| 2 | ஆய்வியல் நிறைஞர் பட்டம் | 15 |
| 3 | முதுநிலைப் பட்டம் | 312 |
| 4 | ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டம் | 407 |
| 5 | பட்டயம் மற்றும் சான்றிதழ்ப் பட்டம் | 259 |
| | மொத்தம் | **1098** |

| ஆ) | **ஆசிரியர் கல்விக்கான தேசியக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்புகள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 6 | இளங்கல்வியியல் பட்டம்<br>முதலாமாண்டு – 100 மாணவர்கள்<br>இரண்டாமாண்டு – 85 மாணவர்கள் | 185 |
| 7 | கல்வியியல் நிறைஞர் பட்டம்<br>முதலாமாண்டு – 2 மாணவர்கள்<br>இரண்டாமாண்டு – 2 மாணவர்கள் | 4 |
| | **மொத்தம்** | **189** |

## 5.4. செயல்பாடுகள்

- தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழாய்வுப் பணிகளோடு கற்பித்தல் பணிகளையும் மிகச்சிறப்பாகச் செய்து வருகிறது.
- பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய மாணவர் படை (NCC) 2023–2024–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

- தமிழர் மரபை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் பொருட்டுச் சிலம்பம் பட்டய வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,89,454 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

## 5.5 நடைபெற்றுவரும் திட்டங்கள்

### 5.5.1 தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுகளை ஆவணப்படுத்துதல், மரபுக் கலைகளை மீட்டுருவாக்கம் செய்தல் திட்டம்

"தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக் கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் துறையை மேம்படுத்துதல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், சிலப்பதிகாரம் காட்டும் இசை ஆடல் அமைதிகளை மீட்டுருவாக்கி ஆவணப்படுத்துதல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளுதல், கைவினைப்பொருட்கள் தயாரித்திடப் பயிற்சி

அளித்தல், நூல்கள் வெளியிடுதல், கருத்தரங்கு நடத்துதல் ஆகிய திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மண்ணின் பாரம்பரியக் கைவினைக் கலைகளை மீட்டெடுத்தல் திட்டத்தில் நெட்டி வேலைப்பாடு மற்றும் தலையாட்டிப் பொம்மை செய்தல் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.5.2 தமிழ்ப் பல்கலைக்கழகத் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகள் பெற நடவடிக்கை

கட்டடங்கள் மேம்பாட்டுப் பணிகள், அலுவலகக் கட்டடம், நூலகக் கட்டடம், கூத்துக்களரி வளாகம், 'த' மற்றும் 'நா' வடிவக் கட்டடங்கள் சிறப்புச் சீர்காப்புப் பணிகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 5.5.3 தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை

இங்கிலாந்து நாட்டு அறிஞர் இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஆய்விருக்கையில், "அறிஞர் இராபர்ட் கால்டுவெல்க்குப் பின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுகள்" என்ற தலைப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது "இராபர்ட் கால்டுவெல் இலக்கண விளக்க அணுகுமுறைகள்" என்ற தலைப்பில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.5.4 முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்

முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 20 பேருக்கும் மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 25 பேருக்கும் கல்வியாண்டில் திங்கள்தோறும் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## 5.6 அறக்கட்டளைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்,

- ரூ. 50 ஆயிரம் வரை–33 அறக்கட்டளைகளும்
- ரூ.50 ஆயிரத்திற்கு மேல் ரூ.1.00 இலட்சம் வரை –15 அறக்கட்டளைகளும்
- ரூ. 1.00 இலட்சத்திற்கு மேல் ரூ.3.00 இலட்சம் வரை – 22 அறக்கட்டளைகளும்
- ரூ. 3.00 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரை – 21 அறக்கட்டளைகளும்
- ரூ. 1.00 கோடிக்கு மேல் 2 அறக்கட்டளைகளும் என மொத்தம் 93 அறக்கட்டளைகள் மூலம் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

## 5.7 மரகதப் பூங்கா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டபேரவையில் 110 விதியின்கீழ் அறிவித்த திட்டத்தின்படி, தமிழ்நாடு அரசால் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்று அரசு வனத்துறையின் வழி பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புற அருங்காட்சியகம்

எழில்மிகு தோற்றம் அமையும் வண்ணம் மரகதப் பூஞ்சோலை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூஞ்சோலையில் பலவகையான தோட்டங்கள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக தமிழ்ப் பல்கலைக்கழகக் குன்றம் கட்டடத்தில் நாட்டுப்புற அருங்காட்சியகப் பகுதி முகப்பில் சுமார் 1.50 ஹெக்டேர் நிலப்பரப்பில் தமிழ்நாடு அரசு வனத்துறையுடன் இணைந்து 12.09.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.8 தமிழ்ப் பண்பாட்டு மையம் / தமிழ் வளர் மையம்

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின்வழி இசை, பரதநாட்டியம் மற்றும் மரபுக் கலைகளுக்குரிய சான்றிதழ் வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இதுவரை 71 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பெற்று சுமார் 5500 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்று இணையவழியில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் வளர் மையத்தின்வழி தமிழ்மொழிச் சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகள் இணையவழி நடத்துவதற்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பெற்றுள்ளது.

## 5.9 புதிய கட்டடங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூ. 5,03,57,000/– (ரூபாய் ஐந்து கோடியே மூன்று இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாமன்னன் இராசராசச் சோழன் பன்னோக்குக் கூடம், உள்விளையாட்டு அரங்கம், கூடுதல் மகளிர் விடுதி, பழைய ஆடவர் விடுதி முதல் தளம் மற்றும் குறளோவியம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஒலி–ஒளிப் பதிவுக்கூடம் ஆகியவை 07.03.2024 அன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டன.

# இயல் – 6

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## 6.1 தோற்றம்

"தமிழ்மொழி இலக்கியத்தின் நிலைக்களன்; இசையில் இனிய ஊற்று; நாடகத்தின் நலங்கொழிக்கும் நன்மொழி!" என்று தமிழ்நாடு அரசின் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் புகழப்பட்ட பெருமைக்குரியது தமிழ்மொழி. உயிர் நாவில் உருவாகிய உலகமொழி நம் செம்மொழியான தமிழ்மொழி. அம்மொழி செம்மாந்து உலக அரங்கில் நடைபோட எண்ணற்ற பணிகளை ஆற்றிவரும் உலகத் தமிழர்களையும், தமிழ் அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் முகமாகத் திகழும் உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில், 1986–ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது.

ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக விழிப்புடன் தொடர்ந்து உயிர்ப்புடன் இயங்கி வரும் ஒரு நகரம் மதுரை மாநகரம். எண்ணிலடங்காச் சிறப்புகளைத் தன்னகத்தே பெற்ற மதுரையில் மேலும் ஒரு தனிச்சிறப்பாகத் திகழ்கின்ற உலகத் தமிழ்ச் சங்கத்தில்

கலையரங்கம், கூட்ட அரங்கங்கள், நிருவாகப்பிரிவு, ஆய்வுப்பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, குழுக்கூட்ட அரங்கம் மற்றும் விருந்தினர் தங்கும் அறைகள் எனப் பல வசதிகளுடன் 14.15 ஏக்கர் நிலப்பரப்பில் 87,300 சதுரஅடியில் அமையப்பெற்றுள்ளது. முன்பக்கச் சுற்றுச்சுவர் ஐயன் திருவள்ளுவனின் 1330 குறள்களையும் தாங்கி நிற்கின்றது.

'புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்... உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்' என்றார் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அறிவு செழிக்க அறிவுக் கோட்டமாகத் திகழும் 'உலகத் தமிழ்ச் சங்க நூலகம்' 27,000–க்கும் மேற்பட்ட நூல்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பெற்றுப் புதுப்பொலிவுடன் செயற்பட்டு வருகின்றது.

மொழிக்கான உன்னத இடமாகக் காட்சியளிக்கும் உலகத் தமிழ்ச் சங்கத்தினைப் பார்வையிடுவதற்காகவும் இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும் அயல்நாட்டுத்

தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் உவகையுடன் வருகைதந்து உலகத் தமிழ்ச் சங்கத்தை கண்டு பூரிக்கின்றனர்.

## 6.2 சங்க அமைப்பு நோக்கம்

- உலகெங்கும் சிறப்பாகத் தமிழ்ப் பணியாற்றி வரும் தமிழ் அமைப்புகளையும் நிறுவனங்களையும் ஆய்வு மையங்களையும் அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ் விவரங்களைப் பதிவு செய்தல் மற்றும் தொகுத்தல்.
- உலக நாடுகளில் தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் இலக்கியத்தையும் பரவச் செய்தல்.
- அயல் நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்வியலையும் இலக்கியப் பங்களிப்பையும் தொகுத்தல்.
- அயலகத் தமிழர் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.

- ❖ மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, பிரெஞ்சு கயானா, அமெரிக்கா, பிரான்சு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.
- ❖ தமிழரின் பண்பாட்டுச் சிறப்பையும் இலக்கிய மேன்மையையும் உலகத் தமிழர்கள் அறிய வழிவகை செய்தல்.

## 6.3 சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம்

உலகத் தமிழ்ச் சங்க வளாகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள காட்சிக் கூடத்தில் பெருவாழ்வு வாழ்ந்த சங்கத் தமிழரின் வாழ்வியலைக் காட்சிகளாக விவரிக்கும் ஓவியங்கள், புடைப்புச் சிற்பங்கள், சிலைகள், கற்சிலைகள், சுவர் ஓவியங்கள் எனக் கலைப்பொருள்கள் வனப்பாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

காட்சிக் கூடத்தில் கல்லூரி மாணவர்களுக்கு சங்கத்தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கும் சிறப்புச்

சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பேச்சுப் போட்டிகளும் இங்கு நடத்தப்பெற்று வருகின்றன.

## 6.4 வாரந்தோறும் தமிழ்க்கூடல்

தமிழைக் கேட்கவும் கருத்துப் பரிமாற்றம் செய்யவும் இன்முகத்துடன் தமிழறிஞர்களும் ஆர்வலர்களும் கூடும் நிகழ்வாகத் 'தமிழ்க்கூடல்' அமைந்துள்ளது. வாரந்தோறும் நடைபெறும் இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று அறிஞர் பெருமக்களின் கருத்துக்களால் பயன்பெறுகின்றனர்.

## 6.5 நூல் அரங்கேற்றம்

தமிழின்பால் கொண்ட பற்றுதலாலும், தங்களின் எண்ணங்களைப் பிறருக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற உந்துதலாலும் நூல்களை இயற்றுவோர் ஏராளம். அவற்றுள் தரமான நூல்களைப் பலரும் அறிந்து தெளிய வேண்டும் என்ற எண்ணத்தின் பலனாய் உலகத் தமிழ்ச் சங்கத்தில் நூல் அரங்கேற்றம் செய்யப் பெறுகின்றது. அறிஞர் பெருமக்களின் மதிப்புரையுடன் பாராட்டுச் சான்றிதழ் அளித்து நூலாசிரியர்கள் பாராட்டப் பெறுகின்றனர்.

## 2023–2024–ஆம் நிதியாண்டில் நடைபெற்ற நூல் அரங்கேற்றம் நிகழ்வுகள்

| வ.எண் | அரங்கேற்றம் செய்யப் பெற்ற நூல்கள் | நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. | 1. திருக்குறள் உலகப் பொதுவுரை<br>2. தடம்பதித்து நட!<br>3. வைகை கவி<br>4. மின்மினி | நூல் அரங்கேற்றம்–30<br>நாள்–25.04.2023 |
| 2. | 5. திருக்குறள் பகுப்பாய்வுக் கோவை<br>6. இளங்குமரனார் களஞ்சியம்<br>7. ஆகாயத்திணை<br>8. காற்றின் நிறம் பச்சை உப்பின் நிறம் சிவப்பு | நூல் அரங்கேற்றம்–31<br>நாள்–12.05.2023 |
| 3. | 9. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்<br>10. தமிழ் பிள்ளைத்தமிழ்<br>11. கூழாங்கற்கள் உருண்ட காலம்<br>12. சிறையில் ஒளிரும் நட்சத்திரங்கள்<br>13. காந்தியின் நான்காவது விரல் | நூல் அரங்கேற்றம்–32<br>நாள்–30.08.2023 |
| 4. | 14. அறிவியற் பார்வையில் சங்க இலக்கியச் செய்திகள்<br>15. மன ஊஞ்சல்<br>16. மிடறுகளின் இடைவெளியில் புத்தன் | நூல் அரங்கேற்றம்–33<br>நாள்–27.09.2023 |

| | | |
|---|---|---|
| | 17. நினைவுகளின் நிழல்கள்<br>18. இவர்கள் இல்லாத நாம் | |
| **5.** | 19. ஆழ்வார்கள் சுட்டும் திருமால் திருப்பெயர்கள்<br>20.ஊற்றுமணல்<br>21. புனிதம் தேடும் புதினம்<br>22. திருக்குறள் உரை | நூல் அரங்கேற்றம்–34<br>நாள்–02.11.2023 |
| **6.** | 23. அன்று இந்த நிலத்தின் நிறம் சிவப்பு<br>24. நிலாச்சோறு<br>25. வாழ்வை வெற்றிகொள்<br>26. கல்வி உயர...<br>27. இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனிதநேயமும் | நூல் அரங்கேற்றம்–35<br>நாள்–30.11.2023 |
| **7.** | 28. மு.மேத்தாவின் கவிதைகளில் எதிர்ப்பரசியல்<br>29. ஆக்கமும் அதன் தாக்கமும்<br>30. 8ப்போட்டு பழகிய கவிதைகள்<br>31. ஆழினி | நூல் அரங்கேற்றம்–36<br>நாள்–28.12.2023 |
| **8.** | 32. காந்தியின் தம்பி தளபதி நாயுடு<br>33. இளமை இனிமை புதுமை<br>34. வாகைமரத்தின் அடியில் ஒரு கொற்றவை<br>35. உறவுக்கு உதவிய ரோஜாச்செடி | நூல் அரங்கேற்றம்–37<br>நாள்–30.01.2024 |

| | | |
|---|---|---|
| | 36. க்ளிக் இருநிமிடக் கதைகள் | |
| 9. | 37. ஆழி உயிர்களின் தாய்மடி<br>38. சூரியச்சில்லுகள்<br>39. நல்லவேளை புத்தனுக்கு ஹைக்கூ எழுதத் தெரியாது<br>40. அழுக்கு | நூல் அரங்கேற்றம்–38<br>நாள்–28.02.2024 |
| 10. | 41. தண்டமிழ்க்கோவை<br>42. கவிஞர் வைகைச்செல்வியின் வாழ்வும் இலக்கியப் பயணமும்<br>43. முத்தத்தின் பிரம்படி<br>44. நெருப்புச் சொற்கள்<br>45. பாசப்பறவைகள் | நூல் அரங்கேற்றம்–39<br>நாள்–21.03.2024 |

## 6.6 நிறுவனர் நாள்

உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவரது பிறந்த நாளான சனவரி 17–ஆம் நாள் ஆண்டுதோறும் நிறுவனர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## 6.7 அயலகத் தமிழ் நூல் வெளியீடு

அயலகத் தமிழர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் முகமாக அயலகத் தமிழ் நூல்கள் வெளியிடப்படுகின்றன. கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் மா. அன்பழகன் அவர்களின் 'செம்பியன் திருமேனி' நூல் வெளியிடப்பெற்றது.

## 6.8 உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் மூன்று அயலகத் தமிழறிஞர்களுக்கு முறையே இலக்கிய விருது, இலக்கண விருது, மொழியியல் விருது என மூன்று

விருதுகள் வழங்கப் பெற்று வருகின்றன. அவ்வகையில், 2021–ஆம் ஆண்டு மற்றும் 2022–ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் அயலகத் தமிழர் நாளான 12.01.2024 அன்று நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் வழங்கப்பட்டன.

## 6.9 **அறக்கட்டளை**

உலகத் தமிழ்ச் சங்கத்தில்,

- ரூபாய் 6,00,000/– மதிப்பீட்டில் சீனக்கவிஞர் யூசி – திருக்குறள் அறக்கட்டளை
- ரூபாய் 5,10,000/– மதிப்பீட்டில் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் – நூற்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளை
- ரூபாய் 1,05,993/– மதிப்பீட்டில் ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழக அறக்கட்டளை
- ரூபாய் 1,25,000/– மதிப்பீட்டில் சிங்கப்பூர் முனைவர்
  ஆ.ரா.சிவகுமாரன் – தேன்மொழி அறக்கட்டளை

உள்ளிட்ட அறக்கட்டளைகளின் சார்பில் ஆண்டுதோறும் நிகழ்வுகள் நடத்தப்பெற்று வருகின்றன.

## 6.10 **அயலகத் தமிழ் நூல்களின் கருவூலம்**

அயலகத் தமிழ் குறித்து ஆய்வு செய்வோருக்குப் பயனளிக்கும் விதமாக, அயலகத் தமிழ் நூல்களுக்கென்றே தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 1180 அயலகத் தமிழ் நூல்களும், 1125 அயலகத் தமிழ் இதழ்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 6.11 உலகத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| வ.எண் | நூல் | விலை |
|---|---|---|
| 1. | உலகளாவிய தமிழ் வளர்ச்சி | ரூ.100/– |
| 2. | சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல் | ரூ.95/– |
| 3. | புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் | ரூ.75/– |
| 4. | தமிழும் சமயமும் | ரூ.100/– |
| 5. | தமிழ் இலக்கியத்தில் நீதி | ரூ.90/– |
| 6. | எழுத்தாளர்கள் பார்வையில் உலகத் தமிழ்ப் படைப்பிலக்கியம் | ரூ.160/– |
| 7. | புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியங்கள் | ரூ.80/– |
| 8. | சங்கத் தமிழரின் கட்டடக்கலை | ரூ.80/– |

| | | |
|---|---|---|
| 9. | மலேசியத் தமிழ் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் | ரூ.110/– |
| 10. | சங்கத் தமிழர் பண்பாடு | ரூ.85/– |
| 11. | புதுக்கவிதையும் தமிழ் வளர்ச்சியும் | ரூ.90/– |
| 12. | பாரதிதாசன் – 125 புதுமையும் புரட்சிக்கவிஞரும் | ரூ.150/– |
| 13. | சங்கத் தமிழர் வாழ்வியல் | ரூ.120/– |
| 14. | அலைகடலுக்கு அப்பால் தமிழர்களின் அடையாளங்கள் | ரூ.95/– |
| 15. | ஆசுதிரேலியத் தமிழ் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் | ரூ.90/– |
| 16. | மின் தமிழ் | ரூ.50/– |
| 17. | ஆசுதிரேலியத் தமிழ்ப் படைப்புகளில் தமிழ்ச் சமூகம் | ரூ.100/– |
| 18. | மலேசியாவில் தமிழ் இலக்கியம் | ரூ.65/– |
| 19. | புலம்பெயர் தமிழ்ச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும் | ரூ.70/– |
| 20. | சங்க இலக்கியத்தில் திணைக்கோட்பாடுகள் | ரூ.130/– |
| 21. | பன்முக நோக்கில் அயலகத் தமிழ்ப் படைப்புகள் | ரூ.200/– |
| 22. | பன்முக நோக்கில் மக்கள் திலகம் | ரூ.250/– |
| 23. | உலகத் தமிழ் அமைப்புகள் தொகுதி | ரூ.250/– |
| 24. | புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் | ரூ.300/– |
| 25. | திருக்குறள் பணியில் தடம்பதித்த சான்றோர் | ரூ.150/– |

| | | |
|---|---|---|
| 26. | பொன்மனச் செம்மல் – ஒரு பன்முகப் பார்வை | ரூ.100/– |
| 27. | செந்தமிழும் சேரநாடும் | ரூ.200/– |
| 28. | பாரெங்கும் பாரதி | ரூ.200/– |
| 29. | சமுதாய மாற்றத்திற்குத் தமிழ்த் திரையுலகின் பங்களிப்பு | ரூ.100/– |

# தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

தொன்மைமிகு தமிழ் மொழியின் மாண்புகளையும், இலக்கியச் செழுமைகளையும், தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் உலகோர் அறிந்திடச் செய்யும் வகையில், தமிழ் வளர்ச்சி தொடர்பான அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அவற்றிற்கு உதவி செய்தல்.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் அடுத்த கட்டமாக, அனைத்து அரசு அலுவலர்களுக்கும் தேர்வுகள் மற்றும் மதிப்பீடுகளுடன் கூடிய ஆட்சிமொழிப் பயிலரங்கங்களை அதிக எண்ணிக்கையில் நடத்தி முழுமையான ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை உறுதி செய்தல்.

சொற்குவை வலைத்தளத்தில், ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள சொற்களுடன், தேவைப்படும் இடங்களிலெல்லாம் புதிய கலைச் சொற்களை உருவாக்கி, உரிய வல்லுநர் குழு மற்றும் அரசின்

ஏற்புடன் அதிக எண்ணிக்கையில் தரமான கலைச்சொற்களைச் சேர்த்து தமிழின் சொல்வளத்தைப் பெருக்குதல்.

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!" என்ற பாவேந்தரின் வரிகளுக்கிணங்க தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பல்வேறு வகைகளில் தொண்டு புரிகிற தமிழார்வலர்கள், தமிழ் இலக்கியவாணர்கள், மொழியாக்க வல்லுநர்கள் உள்ளிட்ட தமிழ்ப் பற்றாளர்களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கித் தொடர்ந்து சிறப்பித்தல் போன்ற நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களுடன் தமிழ்வளர்ச்சித்துறை தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறது.

## நிறைவுரை

கிறித்துவுக்கு முன்னைய ஏழாம் நூற்றாண்டில் எழுமைக்கும் நற்பயன் நல்கும் தொல்காப்பியம்,

கிறித்துவுக்குப் பின்னைய இரண்டாம் நூற்றாண்டு வரை சங்க இலக்கியங்கள்; திருக்குறள்; சிலப்பதிகாரம்; மணிமேகலை,

மூன்றாம் நூற்றாண்டில் திருவாசகம்; திருக்கோவையார்,

நான்காம் நூற்றாண்டில் நாலடியார் முதலான கீழ்க்கணக்கு நூல்கள்,

ஐந்தாம் நூற்றாண்டில் பெருங்கதை,

ஆறாம் நூற்றாண்டில் கல்லாடம்,

ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டுகளில் தேவாரப் பாடல்கள்,

ஒன்பதாம் நூற்றாண்டில் ஆழ்வார்களின் பக்தி பாசுரங்கள்,

பத்தாம் நூற்றாண்டில் சீவக சிந்தாமணி,

பதினொன்றாம் நூற்றாண்டில் பெரியபுராணம்,

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கந்தபுராணம்; பிற்பகுதியில் கம்பராமாயணம்,

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சிவஞான போதம்,

பதினான்காம் நூற்றாண்டில் தலபுராணங்கள்,

பதினைந்தாம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் பாரதம்,

பதினாறாம் நூற்றாண்டில் திருவிளையாடல் புராணம்,

பதினேழாம் நூற்றாண்டில் தேம்பாவணி; சீறாப்புராணம்,

பதினெட்டாம் நூற்றாண்டில் தாயுமானவர் பாடல்கள்,

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார் பாடல்கள்,

இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் பாடல்கள்; பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் என்று மும்மைக்கும் பெரும்பயன் விளைக்கும் முப்பது நூற்றாண்டுக்கும் முன்னிருந்தே ஓடி வரும் பேராறாக தமிழ்த்திரு வரலாறு வருங்காலங்களிலும் கணித்

தமிழாக இணையற்ற இணையத் தமிழாக நீண்டு செல்லும் என்பது தமிழ் வளர்ச்சியின் நெடும்பயணத்தில் நாம் அனைவரும் அறிந்து கொள்ளும் பேருண்மையாகும். அவ்வகையில் தமிழ் வளர்ச்சித் துறையானது பள்ளி மாணவச் செல்வங்களில் தொடங்கி எண்பது ஆண்டு கடந்த அறிஞர்களையும் மயிலிறகால் வருடிச் செல்லும் வகையில் அனைத்துப் பணிகளையும் ஒருங்கே செய்யும் துறையாக மின்னி மிளிர்கிறது.

# வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு

## 2024–2025

| வ. எண் | துறை | 2024–2025 வரவு – செலவு மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 57,36,72 |
| 2 | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 29,11,44 |
| 3 | தமிழ் வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம் | 13,44,65 |
| 4 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 10,42,44 |
| 5 | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 4,87,18 |
| 6 | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 1,84,91 |
| | **மொத்தம்** | **117,07,34** |

**மு.பெ. சாமிநாதன்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறையின் கனவு இல்லத் திட்டத்தில் 10 தமிழறிஞர்களுக்கு வீட்டுவசதிவாரியக் குடியிருப்புக்கான அரசாணை வழங்கப்பட்டன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறையின் கனவு இல்லத் திட்டத்தில்10 தமிழறிஞர்களுக்கு வீட்டுவசதிவாரியக் குடியிருப்புக்கான அரசாணை வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2024ஆம் நாளன்று திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 30.08.2023ஆம் நாளன்று எத்திராஜ் மகளிர் கல்லூரி வளாகத்தில் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை தொடங்கிவைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 12.01.2024ஆம் நாளன்று சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் நாளில் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்கப்பட்டன.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 14.02.2024ஆம் நாளன்று சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்தநூல் பரிசுத் திட்டத்தில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பெற்ற சிறந்த நூல்களுக்கான பரிசு 66 நூலாசிரியர்கள் மற்றும் 66 பதிப்பகத்தாருக்கு வழங்கப்பட்டன.




தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு நாள் விழா 18.07.2023ஆம் நாளன்று சென்னை மாநிலக் கல்லூரியின் திருவள்ளுவர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 12.02.2024ஆம் நாளன்று ஐந்து தமிழறிஞர்களின் அனைத்து படைப்புகளையும் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகைக்கான காசோலை மற்றும் அரசாணை வழங்கப்பட்டன.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.